Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



அசல் 22 கரட் தங்க நகைகளையும், ஓடர் நகைகளையும் குறித்த நேரத்தில் உத்தரவாதத்துடன் செய்து பெற்றுக்கொள்ள

கணேசா நகையகம்

194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

T.P. : 021 222 5987

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2036 | புரட்டாதி- 28 | ஹிஜ்ரி 1428 ரம்ழான் 10 | (14.10.2005) | வெள்ளிக்கிழமை | இதழ்:14

# போர்நிறுத்த அமுலாக்கம் தொடர்பாக எந்த நேரத்திலும் பேசுவதற்கு தயார்!



## புறாவ் ஹொவ்டேயிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

கிளிநொச்சி

போர் நிறுத்த அமுலாக்கம் பற்றிய பேச்சுக்களை எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் நடத்துவதற்கு புலிகள் தயாராக இருப்பதாகவும்-

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள ஆயுதக் குழுக்களை வெளியேற்றி போர்நிறுத்தத்தைச் செயற்படுத்துவது தொடர்பான பேச்சுக்கள் உடனடியாகத் தொடங்கவேண்டும் எனவும் -

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் நோர்வேயின் விசேட தூதுவரான மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் புறாவ் ஹொவ்டேயிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார். (11 ஆம் பக்கம் பார்க்க)



## நாட்டுப்பற்றாளர் சிவகடாட்சத்துக்கு ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி!



யாழ்ப்பாணம்

கோப்பாயில் இராணுவப் புலனாய்வுத்துறையினர் மற்றும் ஈ.பி.டி.பியினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபருமான நடராஜா சிவகடாட்சத்தின் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை நடைபெற்றன.

நாட்டுப்பற்றாளர் நடராஜா சிவகடாட்சத்துக்கு அவரது இல்லத்தில் வைத்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசன் புலிக்கொடியைப் போர்த்தி நாட்டுப்பற்றாளர் கௌரவத்தை வழங்கினார். அதனைத் தொடர்ந்து அவரது புகழுடல் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் மாணவர்கள், கல்வி அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் புடைசூழ ஊர்வலமாக கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு எடுத்துவரப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் அதிகாரி கொலை வழக்கு; தொடர்ந்து விசாரணை நடத்துவதா?

### சட்டமா அதிபரிடம் நீதிமன்றம் கேள்வி

கொழும்பு

யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தன கொலை தொடர்பாக தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சந்தேகநபரான கோபியை - இரண்டு தடவைகள் நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் சாட்சிகள் அடையாளம் காட்டாததால் இந்த வழக்கைத் தொடர்ந்து விசாரிப்பதா என்பதை அறியத்தருமாறு சட்டமா அதிபரிடம் நீதிமன்றம் கோரியுள்ளது.

இந்தக் கொலை தொடர்பில் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேகநபரான வீரபாண்டியன் கோபியை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் கொலை தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்றுமுன்தினம் கொழும்பு மாவட்ட நீதிபதி குசல சறோஜினி வீரவர்த்தன முன்னிலையில் நடைபெற்றது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்களின் போராட்டத்தினால் கல்வி நிலையங்கள் வெறிச்சோடின!

## ஜனாதிபதியாகத் தெரிவானதும் பேச்சுக்களுக்கே முன்னுரிமை!

## மாணவர்களின் போராட்டத்தினால் கல்வி நிலையங்கள் வெறிச்சோடின!

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் கல்வியியலாளர்கள் படுகொலைசெய்யப்பட்ட சம்பவங்களைக் கண்டிக்கும் வகையில் யாழ். மாவட்டத்தில் நேற்று முதல் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் முற்றாகச் செயலிழந்துள்ளன.

கல்வியியலாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களைக் கண்டிக்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த கோரிக்கைக்கு அமைய யாழ். குடாநாட்டின் அனைத்துப் பாடசாலைகள், கல்விநிலையங்கள், உயர் கல்வி நிலையங்களில் கல்விகற்கும் மாணவர்கள் வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் கல்வி நிலையங்கள் அனைத்தும் நேற்று மூடப்பட்டிருந்தன.

இதேவேளை கல்வியியலாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களைக் கண்டிக்கும் முகமாக யாழ். குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் வீதித்தடைகள் போடப்பட்டு மாணவர்கள் மறியற் போராட்டத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நெல்லியடியில் மாணவர்கள் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகம்!

பருத்தித்துறை —

கல்வியியலாளர்கள் படுகொலையைக் கண்டித்து நெல்லியடிச் சந்தியில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்தனர்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு நெல்லியடிச் சந்தியில் மாணவர்கள் இந்த மறியில் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

நெல்லியடி சந்தியூடாகச் செல்லும் வாகனங்கள், அனைத்தும் தடுக்கப்பட்டன. இதனால் சுமார் 1 மணித்தியாலம் நெல்லியடிச் சந்தியூடான போக்குவரத்துகள் தடைசெய்யப்பட்டன.


அப்போது அங்கு வந்த நெல்லியடிப் பொலிஸார் மாணவர்களை அவ்விடத்தை விட்டு அகலுமாறு எச்சரித்தனர்.

அதனைப் பொருட்படுத்தாது நின்ற மாணவர்களை பொலிஸார் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டு கலைத்து அதனூடான போக்குவரத்துக்களை வழமைக்குக் கொண்டுவர முயற்சித்தனர்.

ஆனால் - நெல்லியடிச் சந்தியிலிருந்து பின்வாங்கிய மாணவர்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களுக்கே முன்னுரிமை!

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில்



கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால், விடுதலைப் புலிகளுடனான பேச்சுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமென எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால், விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் அதே வேளை, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக (12 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பற்ற நிலையிலிருப்பதாக இலங்கை மக்கள் உணர்கின்றனர்!

### கிளிநொச்சியில் இயன் மார்ட்டின்



கொழும்பு —

இலங்கை மக்கள் பாதுகாப்பற்ற சூழலில் இருப்பதாக உணர்கிறார்கள் என்று சர்வதேச மனித உரிமைச் செயற்பாட்டாளர் இயன் மார்ட்டின் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்று பிற்பகல் 2 மணிக்கு தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை இயன் மார்ட்டின் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

இந்தச் சந்திப்புக்குப் பின் (12 ஆம் பக்கம் பார்க்க)



EXPOAIR

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

*Your friend in the skies . .*

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# தேசிய மட்டத்தில் ஐந்தாமிடம்

சாவகச்சேரி

5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளில் - மீசாலை வீர சிங்கம் மகாவித்தியாலய மாணவன் ரதிமோகன் தேனுஷன் 167 புள்ளி களைப் பெற்று தேசிய மட்டத்தில் 5 ஆவது இடத்தையும், யாழ். மாவட் டத்தில் இரண்டாமிடத்தையும் பெற் றுள்ளார்.

# சாரணர்கள் கப்போரி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்

இலங்கை சாரணர் சங்கத்தால் காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் - 25 ஆவது வரு டாந்த மாவட்ட கப்போரியும், கிளைச் சங்கத்தின் 25 ஆவது வருடாந்த கம் போரியும் தவிர்க்க முடியாத காரணங் களால் பிற்போடப்பட்டிருப்பதாக மாவட்ட சாரண ஆணையாளர் அறி வித்துள்ளார்.

இராமநாதன் கல்லூரி வளாகத் தில் இன்று மாலை 3 மணி முதல் எதிர்வரும் 17 ஆம் திகதி பிற்பகல் 2 மணிவரை இந்த நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக் கது.

இந்த நிகழ்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று ஆணையாளர் தெரிவித்தார்.

# தீவக வலய செயலமர்வுகள் பிற்போடப்பட்டன

யாழ்ப்பாணம்

தீவக வலயக் கல்வி அலுவலகத் தால் இன்று முதல் எதிர்வரும் 16ஆம் திகதி வரை நடத்தப்படவிருந்த அதி பர், பாட ஆசிரியர்களுக்கான செயல மர்வுகள், விஞ்ஞானக் கண்காட்சி என்பன பிற்போடப்பட்டுள்ளதாக தீவ கக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ. இராதாகிஷ்ணன் தெரிவித்தார்.

மேற்படி செயலமர்வுகள் நடை பெறும் இடங்கள் பின்னர் அறிவிக் கப்படும் எனவும் அவர் மேலும் குறிப் பிட்டார்.

# தமிழ்த் தேசிய எழுச்சி அலுவலகம் திறப்பு

வவுனியா

தமிழ்த் தேசிய மக்கள் எழுச்சிக் கான வவுனியா மாவட்ட அலுவலகம் நேற்றுக் காலை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

எதிர்வரும் 27 ஆம் திகதி நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ள எழுச்சி நிகழ்வு தொடர்பாக மக்கள் சந்திப்புக்கள் நடைபெற்று வருகின் றன.

வன்னி மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு வருகின்றனர்.

# பிரம்படிப் படுகொலை நினைவுதினம்

யாழ்ப்பாணம்

1987 ஆம் ஆண்டு கொக்குவில் பிரம்படிப் பகுதியில் இந்திய இராணு வத்தால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் 18 ஆம் ஆண்டு நினைவு தினம் தொழில்நுட் பக் கல்லூரி மாணவர் ஒன்றியத் தலைவர் கிருபாகரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

பொதுச் சுடரை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்தி ரன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து நினைவுத் தூபி முன்பு ஈகச்சுடரை யும், நினைவுத் தூபிக்கான மலர் மாலையையும் படுகொலை செய்யப் பட்ட ஒருவரின் உறவினர் ஏற்றி வைத்தார். தொடர்ந்து பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.


ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சூர்யா, அஸின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடிக்த

கஜினி



ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்

காட்சிகள்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நேரம்)



சுன்னாகம் நாகம்ஸ்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு மூன்றாவது ஜனத்திரள் வாரமாக ஜெயம் ரவி, ஸ்ரேயா, வடிவேல், கலாபவன்மணி, நடித்த

மழை



காட்சிகள்:-11.00, 3.00, 7.00, (பழையநேரம்)



நிறைஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், லைலா விவேக் நாசர் நடித்த

தில்

காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)



நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த

சாணக்யா



காட்சிகள்:-10.30, 2.30, 6.30, 9.30 (புதிய நேரம்)



மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு!

பார்த்தீபன், லட்சுமிராய், வடிவேல் மற்றும் பலர் நடித்த

குண்டக்க மண்டக்க...

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30



## பதவி வெற்றிடம்

காப்புறுதித்துறையில் முன்னோடியாகத் திகழும் பிரபல காப்புறுதிக் கம்பனி ஒன்றுக்கு யாழ். / வன்னி ஆகிய பிரதேசங்களிலிருந்து

**வெளிக்கள உத்தியோகத்தர்கள் தேவை**

தகைமை :- க.பொ.த.சாதாரணம் சித்தி
விண்ணப்ப முடிவு திகதி:- 25-10-2005

*விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி;*
*விளம்பர இல.44,*
*நமது ஈழநாடு,*
*267, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/4727)


## அரசாங்க அறிவித்தல்

## யாழ்.மாவட்ட செயலகம்

### வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான கேள்வி - 2005/2006

யாழ்.மாவட்ட செயலகத்திலுள்ள கீழ்க் குறிப்பிடப்படும் வாகனங்களை சேவிஸ் செய்வதற்கான கேள்வி கோரப்படுகின்றது. இது தொடர்பான நிபந்தனைகளையும் விண்ணப்பப்படிவத்தினையும் மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில், அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 4.45 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, **மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்** என விலாசமிடப்பட்டு, மேலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான கேள்வி விண்ணப்பம் - 2005/ 2006** எனக் குறிப்பிட்டு, பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகக் கேள்விப் பெட்டியிலோ 25.10.2005 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்படவேண்டும். அன்றைய தினம் பி.ப.3.00 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவருடைய பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.

**வாகனங்கள் விபரம்**

- பிக்கப்
- வான்
- கார்
- மோட்டார் சைக்கிள்
- லொறி
- முச்சக்கர வண்டி (AUTO)
- ஜீப்

*க.கணேஷ்,*
*அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்,*
*யாழ்ப்பாண மாவட்டம்.*

(4725)


ஸ்ரீ ராம ஜெயம்

## அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

## நூல் வெளியீடு



**இடம்:** புதிய வசந்த மண்டபம்
**காலம்:** 15.10.2005 சனிக்கிழமை (சப்பறத்திருவிழா)
**நேரம்:** பி.ப 2.00 மணி

**வெளியிடப்படும் நூல்கள்**

☆ வல்லிபுர மாயன் கோவை
நூலாசிரியர் பிள்ளைக்கவி வ.சிவராசசிங்கம்
☆ தட்சணகைலாய புராணம் (மீள் பதிப்பு)
நூலாய்வாளர்கள் -
கலாநிதி க.சச்சிதானந்தம்[ B.A.(Hons) M.Lit,phd]
பேராசிரியர் கலாநிதி சிவலிங்கராசா (தலைவர், தமிழ்த்துறை யாழ்.பல்கலைக்கழகம்)

**சமுத்திர தீர்த்த உற்சவம்**
*காலம்: 17.10.2005 ஞாயிற்றுக்கிழமை*
*நேரம்: தம்பப்பூசை 1.30 மணி*
*வசந்தமண்டப பூசை 2.00மணி*
*கடல் நோக்கி புறப்படுதல் 3.00மணி*
*சமுத்திர தீர்த்தம் 4.00 மணி*

துன்னாலை வடக்கு,
புலோலி.
T.P:021 2263074

(C/4723)

செயலாளர்
அறங்காவலர் சபை.


# BRAC SRI LANKA

CAREER OPPORTUNITY

## BRAC invites applications from suitable candidates for the following positions

BRAC one of the world's largest non Government development organizations, has been operating health, education, social development and micro Finance programmes in Bangaladesh since 1972. Its annual expenditure is US$ 235 million and it has over 30,000 and 61,000 regu lar and part - time staff, respectively. BRAC launched Its rehabilitation programme in Afghanistan in May 2002 and it is presently opening developmental activities in 17 provinces. BRAC is now in Srilanka in order to undertake a rehabilitation programme in the tsunami affected areas. The programme will focus on rehabilitation and development activities in the districts of Jaffna, Mullaitivu, Batticalo, Ampara, Trincoma lee, Galle, Mattara & Hamban tota. The programme will help to reestablish various livelihood activities and achieve sustainable recovery.

**1. Position: Staff Officer (Male)**
**Qualification:**
- Candidate must have strong verbal and written English communication skills.
- Experience working with users in Microsoft Office.
- Strong Interpersonal and communication Skills.
- Experience in report preparing & analysis.

**2.Position: Area Manager (Female)**
**Qualification:**
- Graduate (Minimum) from any discipline or diploma from school of social work.
- Candidate having work experience with NGO and being affected by tsunami will be given preference.
- candidate must have strong verbal and written English communication skills

**3. Position: Accountant (Female)**
**Qualification:**
- Graduate/ A/L in Commerce & Finance (Minimum)
- Candidate having two years accounting work experience with NGO or Government Sector in.
- Candidate must have strong verbal and written English communication Skills.
- Experience working with users in Microsoft Office.

**4. Position: Programme organizer (Female)**
**Qualification:**
- A/L Pass (Minimum)
- Candidate having work Experience with NGO and being affected by tsunami will be given preference.
- Candidate must have strong verbal and written English communication Skills.

**5. Position: Office Assistant (male) Qualification:**
- A/L Pass (Minimum)
- Candidate must have strong verbal and written English communication Skills.

The closing date for Application 20th October 2005. Successful candidates will be contracted for one year and could be extended for a further period, subject to funding and performance. If the above requirements are met please send your complete CV along with two passport size photographs to BRAC-Srilanka, 113, Kachcheri Nallur Road, Jaffna within 20 October 2005. Candidate will be recruited for Jaffna & Mullaitivu District.

Please mention the following on top of the application and envelop: position applied for, preferred employment location and preferred place of interview.

**BRAC IS AN EQUAL OPPORTUNITY EMPLOYEER**

(2086)

# அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரி பொங்கு தமிழ் தீப்பந்த எழுச்சி பேரணி!

## ஒஸ்லோவில் 20 ஆம் திகதி நடைபெறும்

மெல்பேர்ன்—

முடங்கிக்கிடக்கும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடங்க இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும் என வலியுறுத்தி, நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் எதிர்வரும் 20 ஆம் திகதி பொங்கு தமிழ் தீப்பந்த எழுச்சிப்பேரணி நடத்தப்படவுள்ளது.

ஒஸ்லோ மத்திய ரயில் நிலையத்துக்கு அருகாமையில் இந்தப் பேரணி நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக நோர்வே தமிழ் அமைப்புகளின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

நீண்டகாலமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற அழுத்தத்தை அனைத்துலக சமூகம் இலங்கைக்கு கொடுப்பதன் மூலம் இலங்கைத் தீவில் நீதியானதும், உண்மையானதுமான சமாதானம் உருவாகப் பங்காற்றவேண்டும்.

ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளுக்கு விடுதலைப் புலிகளின் பயணங்கள் வரவேற்கப்படவில்லை என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாடானது- தமிழ்மக்களின் போராட்ட நியாயப்பாடுகளையும் உண்மை நிலைமைகளையும் அனைத்துலக சமூகத்துக்கு எடுத்துச் சொல்வதற்கான கதவுகளை மூடியுள்ளது.

எனவே, ஐரோப்பிய ஒன்றியத்தின் அந்த நிலைப்பாடு மீள் பரிசீலிக்கப்படுவதோடு, இலங்கைத்தீவின் இனப்பிணக்கில் தொடர்புள்ள இரண்டு தரப்புக்களும் சமத்துவத் தன்மையுடன் நடத்தப்படவேண்டும் எனவும் -

விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிகள் என்ற யதார்த்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தமிழ் மக்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி ஆகிய வாழ்வுரிமைகளின் அடிப்படையில் தமிழீழ மக்களின் இறைமைக்கான போராட்டத்தை அனைத்துலக சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் -

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தமிழ்மக்களின் வாழ்விடங்களை ஆக்கிரமித்து நிற்கும் அரச படைகள் வெளியேற்றப்பட்டு, தமிழ் மக்கள் மீது, நடத்தப்படும் நிழல் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் போர் நிறுத்த ஒப்பந்தம் செழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு அதன் மேன்மை பேணப்பட வேண்டும் எனவும் -

சுனாமி பொதுக்கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்படுவதற்கான அழுத்தம் இலங்கை அரசாங்கத்தின் மீது செலுத்தப்பட வேண்டும். தமிழர் தாயகத்தில் நடைமுறையிலிருக்கும் தனியாட்சிக் கட்டமைப்பை அனைத்துலக சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ள அவ்வறிக்கையில் -

சிறுவர்கள், இளையவர்கள், பெரியவர்கள், முதியோர் என நோர்வேயின் திசைகளெங்கும் வாழும் தமிழர்கள் யாவரும் அணிதிரண்டு, பதவியேற்கவுள்ள புதிய நோர்வே அரசாங்கத்திற்கு தமிழ்த் தேசியத்தின் உரிமைக் குரலை வெளிப்படுத்துவோம் அணியணியாக எழுந்து வாரீர் எனவும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கல்கிசை நீதிமன்றத்தில் குண்டுப்புரளியால் பரபரப்பு!

கொழும்பு—

கல்கிசை நீதிமன்றத்தில் குண்டுவைத்திருப்பதாகக் கிளம்பிய புரளியால் நேற்றுமுன்தினம் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கல்கிசை நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் காலை 9.25 மணியளவில் வந்த அநாமதேய தொலைபேசி அழைப்பு காலை 10.30 மணியளவில் நீதிமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கும் குண்டு வெடிக்கும் என கூறியது.

இதனையடுத்து பொலிஸாரும் - குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரும் வரவழைக்கப்பட்டனர். நீதிமன்றத்தில் அனைவரும் வெளியேற்றப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டபோதும், சந்தேகத்திற்கிடமான எந்தவொரு பொருளும் கிடைக்கவில்லை.

அதன்பின்னர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடங்கின. சில வாரங்களுக்கு முன்னர் புதுக்கடை நீதிமன்ற வளாகத்திலும் குண்டு இருப்பதாக வதந்தி கிளப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜயந்த தனபாலவும் கொலைப் பட்டியலில்!

### ஜலண்டின் கண்டுபிடிப்பு இது



கொழும்பு—

அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால விடுதலைப் புலிகளின் கொலைப்பட்டியலில் உள்ளடங்கியுள்ளதாக அரச புலனாய்வுத்துறையை மேற்கோள்காட்டி ஜலண்ட் ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து அந்தப் பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரது உயிருக்கு எவ்வாறு அச்சுறுத்தல் இருந்ததோ அதேயளவு அச்சுறுத்தல் ஜயந்த தனபாலவுக்கும் உள்ளது. ஜயந்த தனபாலவை இலக்கு வைத்து அண்மையில் தாக்குதல் நடத்துவதற்காக விடுதலைப்புலிகள் பல தகவல்களை பெற்றுள்ளதை அரச புலனாய்வுத் துறையினர் கண்டுபிடித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அவுஸ்ரேலிய தம்பதியினரே ஞானக்கோனுக்கு அடைக்கலம்!

கொழும்பு—

லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழ் வர்த்தகர் சாள்ஸ் ஞானக்கோனுக்கு அவுஸ்ரேலிய தம்பதியினரே தங்குமிட வசதிகளை வழங்கியிருப்பதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர்.

இந்த அவுஸ்ரேலிய தம்பதியினர் வாடகைக்கு எடுத்திருக்கும் வீட்டிலிருந்தே ஞானக்கோன் கைதுசெய்யப்பட்டார்.

சுனாமி நிவாரணப் பணிகளுக்கென இலங்கை வந்துள்ள இந்த அவுஸ்ரேலிய தம்பதியினர் தெஹிவளை நிகபே வீதியில் வீடொன்றை வாடகைக்கு எடுத்துள்ளனர். ஆனால், இந்தத் தம்பதியினர் எந்தவொரு நிவாரண நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கூறுகின்றனர்.

கைதுசெய்யப்பட்ட ஞானக்கோன் பைனியர் ஸ்பிரிட் டெவலெப்மென்ட் என்னும் நிறுவனத்தின் பணிப்பாளர் என்றும், இவரிடம் அவுஸ்ரேலிய நாட்டுக் கடவுச்சீட்டு இருந்ததாவும் தெரிவிக்கப்படுகிறது.

ஞானக்கோனுக்கு வெள்ளவத்தைப் பிரதேசத்தில் வீடொன்று இருப்பதாகவும், தற்போது அங்கு தொண்டர் நிறுவனம் ஒன்று இயங்குவதாகவும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கூறுகின்றனர்.

தற்போது கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டுவரும் ஞானக்கோன் சுகவீனம் அடைந்திருப்பதனால் அவருக்கு மருத்துவ வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் கணினிக் கொள்வனவில் மோசடி!

### மங்கள சமரவீர கூறுகிறார்



கொழும்பு—

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக் காலத்தில் அமைச்சரவை அனுமதியின்றி கணினிகளைக் கொள்வனவு செய்ததில் நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீர-லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது பிரதமர் காரியாலயத்துக்கு 340 மில்லியன் பெறுமதியான 39 கணினிகளைக் கொள்வனவு செய்ததில் நிதி மோசடிகள் நடந்துள்ளன என்றும், அது தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறுகோரி - சிவில் விமான சேவைகள் அமைச்சர் மங்கள சமரவீர நேற்று லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தார்.

அமைச்சரவையின் அனுமதியைப் பெறாது அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகர் பாஸ்கரலிங்கத்தின் ஆலோசனையின் பேரில் டிக்சன் என்பவர் இந்த கணினிகளைக் கொள்வனவு செய்துள்ளார் என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

39 கணினிகளைக் கொள்வனவு செய்வதற்கு 340 மில்லியன் ரூபாய் செலவாகியிருப்பதுடன் அவை உரிய தரத்தில் இல்லாதது நிதி மோசடி இடம்பெற்றிருப்பதற்கு இன்னொரு காரணம் என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதியமைச்சர் சிறீபதி சூரியாராச்சி, நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோருடன் இணைந்து மங்கள சமரவீர இந்த முறைப்பாட்டைக் கையளித்தார்.

## தபால்மூல வாக்களிப்பு நவம்பர் 7,8 ஆம் திகதிகளில்

கொழும்பு—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தபால்மூலம் வாக்களிக்க விண்ணப்பித்த அரச ஊழியர்கள் தமது வாக்குகளை அடுத்த மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் அளிக்க முடியுமென தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 27ஆம் திகதி அரச அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார். அன்றைய தினம் அஞ்சல் திணைக்களத்தின் ஊடாக வாக்காளர் அட்டைகள் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதிக்கு முன்னர் சகல வாக்காளர் அட்டைகளும் விநியோகித்து முடிக்கவேண்டும். அவ்வாறு விநியோகிக்கமுடியாத வாக்காளர் அட்டைகள் பிரதான அஞ்சல் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்படவேண்டும் என தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, வடக்கு - கிழக்கில் தேர்தல் கடமைகளில் ஈடுபடச்செல்ல விரும்பும் அதிகாரிகளை அங்கு அனுப்பிவைப்பதற்கு தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

(01)



இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட கடந்தவார இறுதியில் யாழ்.குடாநாட்டுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு - 51 ஆவது, 55 ஆவது டிவிசன்களின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்தார். யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனுடன் இணைந்து படைநிலை ஒன்றைப் பார்வையிட்டபோது எடுக்கப்பட்ட படம்.

## துண்டுப் பிரசுரம் விநியோகிப்பதற்கு தேர்தல் ஆணையாளர் தடைவிதிப்பு!

கொழும்பு—

பொது இடங்களில் ஜனாதிபதித் தேர்தல் பிரசார துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு தேர்தல் ஆணையாளர் தடைவிதித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் செயலர்களைத் தேர்தல் ஆணையாளர் நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைத்துக் கட்சிகளின் செயலர்களும் பங்கேற்றனர். இந்தச் சந்திப்பிலேயே தேர்தல் ஆணையாளர் சில நடைமுறைகளை அறிவித்தார்.

அவையாவன -

மாவட்டங்கள் மற்றும் தேர்தல் தொகுதிகளில் கட்சிகள் தலா ஒரு தேர்தல் பிரசார அலுவலகங்களை மாத்திரமே அமைக்க முடியும்.

இவற்றை அமைக்க உதவித் தேர்தல் ஆணையாளர்களிடமும், பொலிஸாரிடமும் அனுமதி பெறவேண்டும். அதேநேரம் இந்த அலுவலகங்களில் தேர்தல் வேட்பாளர்களின் உருவப்படங்கள் மற்றும் பதாகைகளை வைக்கமுடியும்.

வேட்பாளர் பயணம் செய்யும் வாகனங்களில் மட்டுமே பிரசார சுவரொட்டிகளைப் பயன்படுத்தமுடியும். அனுமதி வழங்கப்படாத வாகனங்களில் தேர்தல் பிரசார நடவடிக்கை முன்னெடுக்கப்படுமானால் அந்த வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்படும்.

பொது இடங்களில் தேர்தல் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. அரசாங்க இலத்திரனியல் ஊடகங்களில் வேட்பாளர்களுக்கு வழங்கப்படும் ஒளிபரப்பு நேரம் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அனைத்து வேட்பாளர்களுக்கும் உரியமுறையில் தேர்தல் பிரசார நேரம் குறித்த இலத்திரனியல் ஊடகங்களால் ஒதுக்கப்படாவிட்டால் அதனை மேற்பார்வை செய்ய தாம் தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

(01)

சலஞ்சர் கிண்ண கிரிக்கெட்

# இந்திய சீனியர், இந்திய பி அணிகள் இறுதியாட்டத்திற்குத் தெரிவாகின!



மொஹாலி

சலஞ்சர் கிண்ண கிரிக்கெட் போட்டி இறுதியாட்டத்தில் விளையாட இந்திய சீனியர் அணியும், இந்திய பி அணியும் தகுதி பெற்றன.


பஞ்சாப் மாநிலம் மொஹாலியில் சலஞ்சர் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டி கடந்த 10ஆம் திகதி தொடங்கியது. முதல் போட்டியில் இந்திய சீனியர் அணியை 1 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய ஏ அணி தோற்கடித்தது.

2ஆவது போட்டியில் இந்திய பி அணியை 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இந்திய சீனியர் அணி தோற்கடித்தது.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் நடந்த 3ஆவது போட்டியில் இந்திய ஏ அணியும், இந்திய பி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய பி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதையடுத்து துடுப்பாட்டத்தைத் தொடங்கிய இந்திய ஏ அணி தொடக்கத்திலேயே 2 விக்கெட்டுக்களை இழந்தது.

இதன்பின் கப்டன் லக்ஸ்மனும், சுரேஷ் ரெய்னாவும் சேர்ந்து அணியின் ஸ்கோரை உயர்த்தினர். இருவரும் இணைந்து 3ஆவது விக்கெட்டுக்கு 187 ஓட்டங்களைச் சேர்த்தனர். லக்ஸ்மன் 110 ஓட்டங்களும், சுரேஷ் ரெய்னா 97 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். ஆனால், கடைசிக் கட்ட ஓவர்களில் இந்திய ஏ அணி வீரர்கள் சிறப்பாக விளையாடவில்லை. முடிவில் 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 260 ஓட்டங்களை எடுத்தது. இந்திய பி தரப்பில் பண்டாரி, போஸ், சாவ்லா தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

47 ஓவர்களுக்குள் 261 ஓட்டங்களை எடுத்தால்தான் இறுதிப்போட்டிக்குத் தகுதிபெறமுடியும் என்ற நிலையில் இனிங்ஸை தொடக்கியது இந்திய பி அணி. ராபின் உதப்பாவும், தவானும் மிகச் சிறப்பாக விளையாடி அணியின் ஸ்கோரை மின்னல் வேகத்தில்




உயர்த்தினர்.

இதனால் வெற்றி இலக்கை இந்திய பி மிக எளிதாக எட்டியது. முதல் விக்கெட்டுக்கு தவானும், உதப்பாவும் 148 ஓட்டங்களை எடுத்தனர். தவான் 40 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இதன்பின் கப்டன் மொங்கியா இணைந்தார். சதம் அடித்தபின் ஓய்வு பெற்று உதப்பா பவிலியன் திரும்பினார். 44 ஓட்டங்கள் எடுத்து மொங்கியா ஆட்டமிழந்தபின் மீண்டும் களமிறங்கினார் உதப்பா.

38.5ஆவது ஓவரிலேயே இந்திய பி அணி 3 விக்கெட் இழப்புக்கு 264 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. அதிகபட்சமாக இந்திய பி அணி சார்பில் உதப்பா 93 பந்துகளில் 19 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 116 ஓட்டங்களை எடுத்தது குறிப்பிடத்தக்கது.



இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் இறுதிப் போட்டியில் இந்திய சீனியர் அணியுடன் மோத இந்திய பி அணி தெரிவானது.

# உலகக் கிண்ண கிரிக்கெட் இந்தியாவில் நடக்க வாய்ப்பு!

சிட்னி

2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இந்தியாவில் நடத்தப்பட வாய்ப்பு இருப்பதாகத் தெரிய வருகிறது.

4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை கடந்த 1987, 1996ஆம் ஆண்டுகளில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து நடத்தின. 2007ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் 2011ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ணப் போட்டியை நடத்த இந்திய கிரிக்கெட் சபை முயற்சித்து வருகிறது. முன்புபோல் பாகிஸ்தான் மற்றும் இலங்கையுடன் இந்தப் போட்டியை நடத்தவும் தயார் என்று அறிவித்துள்ளது.

சிட்னியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த ஐ.சி.சி. நிர்வாகக் குழுக் கூட்டத்தில் 2011ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ணப் போட்டியை யார் நடத்துவது என்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது. இந்தப் போட்டியை இணைந்து நடத்த அவுஸ்ரேலியாவும், நியூஸிலாந்தும் முயற்சித்து வருகின்றன.

எனினும், கிரிக்கெட் விளையாடும் நாடுகள் ஆசியாவில் அதிகம் இருப்பதால், இந்தப் போட்டியை இந்தியாவுக்கு ஒதுக்க ஐ.சி.சி. முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. எனினும் இது பற்றி இறுதி முடிவு அடுத்த ஆண்டு லண்டன் லோர்ட்ஸில் ஜூன் மாதம் நடைபெறும் ஆண்டுக் கூட்டத்தில்தான் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று ஐ.சி.சி தலைவர் ஈசான் மணி தெரிவித்தார்.

# போட்டி ரசிகர்களின் ஆர்வத்தை சுழற்பந்து வீச்சாளர்கள் கவர்வர்

## வோன், முரளி, விற்றோரி கூட்டாக பேட்டி

சிட்னி

சுழற்பந்து வீச்சு கிரிக்கெட் ஆட்டத்தைக் காண்பவர்களின் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்யும் என்று அவுஸ்ரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோன் தெரிவித்தார்.

சுப்பர் சீரிஸ் போட்டியின் 6 நாள் டெஸ்ட் போட்டி - அவுஸ்ரேலியாவில் உள்ள சிட்னி மைதானத்தில் இன்று தொடங்கவுள்ளது.

இதில் உலக லெவன் அணியும், உலக சம்பியன் அவுஸ்ரேலிய அணியும் மோதவுள்ளன.

இந்த நிலையில், இந்தப் போட்டியில் பங்கேற்கும் சுழற்பந்து வீச்சாளர்கள் வோன் (அவுஸ்ரேலியா), முரளிதரன் (இலங்கை), டானியல் விற்றோரி (நியூஸிலாந்து) ஆகியோர் நேற்றுமுன்தினம் சிட்னியில் கூட்டாக நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர்.

அப்போது வோன் கூறுகையில் - உலகின் சிறந்த 4 சுழற்பந்து வீச்சாளர்களின் செயற்பாட்டை இந்தப் போட்டியில் காணலாம். அதிக சுழற்பந்து வீச்சாளர்கள் இருப்பது ஆட்டத்துக்கு சிறப்பானதாகும். சுழற்பந்து வீச்சாளர்களுக்கு எதிராக துடுப்பாட்ட வீரர்கள் ஆடுவதைப் பார்க்க ரசிகர்கள் அதிகம் விரும்புவார்கள். சிட்னி மைதானம் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும் என்றார்.

இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் கூறுகையில் - அவுஸ்ரேலியாவில் கடந்த 10 ஆண்டுகளாக நான் டெஸ்ட் போட்டியில் ஆடியது இல்லை. எனவே, இந்தப் போட்டியில் சிறப்பாக ஆடவேண்டிய பெரிய சவால் எனக்கு இருக்கிறது.

நான் 2 டெஸ்ட் போட்டியில் மட்டுமே இங்கு ஆடியுள்ளேன். அதில் 3 விக்கெட்டுக்களை எடுத்தேன். அதைவிட இந்த முறை சிறப்பாக ஆடுவேன் என்ற நம்பிக்கையுள்ளது என்று தெரிவித்தார்.

நியூஸிலாந்து சுழற்பந்து வீச்சாளர்







டானியல் விற்றோரி கூறுகையில் - இந்தப் போட்டியை அதிக எதிர்பார்ப்புடன் எதிர்நோக்கியிருக்கிறேன். நியூஸிலாந்து அணி இங்கு டெஸ்ட் போட்டியில் ஆடி நீண்ட நாட்கள் ஆகிறது.

இது எனக்கு முக்கியமான போட்டியாகும் என்று கூறினார்.

# விளையாட்டு

# ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி; ஒரே பிரிவில் இந்தியா - பாகிஸ்தான்

கோலாலம்பூர்

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்தியாவும், பாகிஸ்தானும் ஒரே பிரிவில் இடம்பெற்றுள்ளன.

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிகள் பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது. இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஓமான் ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன. இந்தப் போட்டிக்கான கால அட்டவணையை ஆசிய கிரிக்கெட் சபை, மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நேற்றுமுன்தினம் வெளியிட்டது.

ஏ பிரிவில் இலங்கை, பங்களாதேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய அணிகளும் பி பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், ஓமான் ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதி பெறும். அடுத்த சுற்றில் 4 அணிகளும் ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன.

இதில் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும். போட்டிகள் பெப்ரவரி 16ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை நடைபெறும். இந்தியாவும், பாகிஸ்தானும் கராச்சியில் பெப்ரவரி 18ஆம் திகதி மோதவுள்ளன.

# பூகம்பத்தால் பாதிக்கப்பட்டோருக்கு ஐ.சி.சி ஆறு கோடி ரூபா நிதியுதவி

சிட்னி

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட இந்தியா மற்றும் பாகிஸ்தானில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஆறு கோடி ரூபா வழங்க சர்வதேச கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

சிட்னியில் நிருபர்களிடம் சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர் ஈசான் மணி கூறியதாவது -

கடந்த சில நாட்களுக்கு முன் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தால் இந்தியாவின் காஷ்மீர் பகுதியும், பாகிஸ்தானும் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பூகம்பத்திற்கு 30 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியானது கேட்பதற்கு அதிர்ச்சியாக உள்ளது. பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.



இந்தியா மற்றும் பாகிஸ்தானில் பூகம்ப நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஆறு கோடி ரூபாய் வழங்க ஐ.சி.சி. முடிவு செய்துள்ளது என்றார்.

# ஐ.சி.சியின் இரு விருதுகளைப் பெற்ற கலிஸுக்கு தென்னாபிரிக்கா புகழாரம்



ல ன்

ஐ.சி.சி. இரட்டை விருதுகளை வென்ற ஜக் கலிஸை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை, நாட்டுக்கு கிடைத்த மகத்தான சொத்து என வர்ணித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை விருதுகள் சிட்னியில் வழங்கப்பட்டன. சிறந்த டெஸ்ட் வீரர், இந்த ஆண்டின் சிறந்த வீரர் ஆகிய விருதுகளை கலிஸ் அள்ளிச் சென்றார். அவுஸ்ரேலிய வீரர்களின் சவாலைச் சமாளித்து விருது வென்றது குறித்து தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைத் தலைமை நிர்வாகி ஜெரால்ட் மயோலா மகிழ்ச்சி தெரிவித்தார். இவர் கூறியதாவது -

இந்த ஆண்டுக்கான ஐ.சி.சி. விருதுகளில் தென்னாபிரிக்காவின் ஆதிக்கத்தைக் காணமுடிந்தது. குறிப்பாக கலிஸ் இரு விருதுகளைத் தட்டிச் சென்றார். அவுஸ்ரேலியாவின் மக்ரா, ஷேன் வோனை மிஞ்சி சிறந்த விருது வென்றது சிறப்பம்சம். இது டெஸ்டில் கலிஸின் சாதனைக்கு கிடைத்த சரியான அங்கீகாரம்.

துடுப்பாட்ட வீரர், பந்துவீச்சாளர், களத்தடுப்பாளர் என கிரிக்கெட்டின் அனைத்துத் துறைகளிலும் கலக்கலாகச் செயற்பட்டார். இதற்காக ஆண்டின் சிறந்த வீரர் விருதையும் பெற்றார். இவரால் தென்னாபிரிக்க கிரிக்கெட் பெருமை கொள்கிறது. 10 ஆண்டுகளுக்கு மேலாக அணியின் முன்னணி வீரராகத் திகழ்கிறார். இவர் அணி, நாட்டுக்கு கிடைத்த மிகப் பெரிய சொத்து. இதேபோல் இளம் வீரர் சிமித் உலக டெஸ்ட் அணியில் இடம்பிடித்துள்ளார்.

புதுமுக வீரருக்கான பட்டியலில் டி வில்லியர்ஸ் இரண்டாம் இடம் பெற்றார். நடுவர் ரூடி குயர்ட்சன் முதல் மூன்று இடங்களுக்குள் இடம்பெற்றார். இது தென்னாபிரிக்க அணி சரியான பாதையில் செல்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. இவ்வாறு ஜெரால்ட் மயோலா தெரிவித்தார்.

# உலக செஸ் சம்பியன் போட்டி இரண்டாம் இடத்தில் ஆனந்த்!

சான் லூயிஸ்

உலக செஸ் சம்பியன்ஷிப் தொடரில் விஸ்வநாதன் ஆனந்த் இரண்டாவது இடத்திற்கு முன்னேறினார்.

முன்னணி கிராண்ட்மாஸ்டர்கள் பங்கேற்கும் உலக செஸ் சம்பியன்ஷிப் தொடர் ஆஜென்ரீனாவின் சான் லூயிஸ் நகரில் நடைபெற்றுவருகிறது. மொத்தம் 14 சுற்றுகள் கொண்ட இந்தத் தொடரில் 12ஆம் சுற்றுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. இதில் இந்திய வீரர் ஆனந்த், ஹங்கேரியின் பீற்றர் லிகோவை எதிர்த்து விளையாடினார். தொடக்கம் முதலே ஆனந்த் ஆதிக்கம் செலுத்தினார். இவர் 47ஆவது காய் நகர்த்தலில் லிகோவை வீழ்த்தினார்.



இதன் மூலம் 7.5 புள்ளிகள் பெற்ற ஆனந்த் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். இவருடன் பீற்றர் சிவில்டரும் (ஹங்கேரி) 7.5 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பகிர்ந்துள்ளார். வசெலின் தபலோவ் (பல்கேரியா) 9 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கிறார். இன்னும் இரண்டு சுற்று மட்டுமே மீதமுள்ளதால், ஆனந்த் சம்பியன் பட்டம் வெல்லும் வாய்ப்பை இழந்துள்ளார்.

# மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் வளர்ச்சிக்கு சிவபூமி மனவிருத்திப் பாடசாலை சிறந்த வரப்பிரசாதம்

## யாழ்.வலயப் பணிப்பாளர் விக்னேஸ்வரன்

கோண்டாவில்

போர்நிறுத்தம் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்களில் எத்தனையோ குழந்தைகள் மனரீதியிலான பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் குழந்தைகளுடைய முகங்களில் சிரிப்பைக் காணாதிருந்த பெற்றோர்களுக்கு இந்த சிவபூமி நிறுவனம் அந்தக் குழந்தைகளின் முகத்தில்சிரிப்பைப் புகுத்தியிருக்கின்றது. இந்த வகையில் கடந்த சில வருடங்களாக இங்கு பணியாற்றியவர்கள் - உண்மையில் பெரியதொரு பேறுபெற்றவர்கள் என்றுதான் குறிப்பிட வேண்டும். என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையில் நடைபெற்ற வாணி விழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தா.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற வாணி விழா நிகழ்வில் ப.விக்னேஸ்வரன் தொடர்ந்து பேசுகையில்-

வளர்ச்சியடைந்த நாடுகளிலே இவ்வாறான குழந்தைகளுக்கென நிறுவனங்கள் தங்களது சுய செயற்பாடுகளை நிறுத்தி முனைப்புடன் செயற்படுகின்றன.

இன்று ஐக்கிய நாடுகள் நிறுவனம் அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தின் அடிப்படையில் அது வலதுகுறைந்த குழந்தைகளென்றாலென்ன, கண்பார்வை குறைந்த குழந்தைகளென்றாலென்ன -அல்லது வேறு எந்த அவயவக் குறைவு இருக்கின்ற குழந்தைகளென்றால் என்ன அவர்கள் அனைவருக்கும் விசேட கல்வி என்ற அடிப்படையில் கல்வியை வழங்கி அவர்களையும் மண்ணிலே நிமிர்ந்து நிற்கக்கூடியளவுக்கு செயற்பாடுகள் பல முனைகளில் முனைப்புடன் மேற்கொள்ளப்படுவதைக் காண்கின்றோம்.

அந்த வகையிலே இவ்வாறான நிறுவனங்களை அமைப்பதன் மூலம் எத்தகைய மாணவர்களும் எம் மண்ணிலே சிறப்பாக வாழக் கூடியளவுக்கு அவர்களுடைய மனதில் மாற்றங்களை ஏற்படுத்தி வளர்ச்சி பெறவைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து சிவபூமி மாணவர்களது கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வின் இறுதியில் பரிசில்களை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த திருமதி ஞானச்செல்வி, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்திட்ட அதிகாரி வேளினி ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். இந்த நிகழ்வுக்குப் பெருமளவானோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (82)

## உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு, நாவலர் கலாசார மண்டபத்தில் மாநகர சபை செயலாளர் திருமதி. ம.வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவும், கௌரவ விருந்தினராக யாழ். மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

## சிறந்த ஆசிரியராகத் தெரிவு



நெல்லியடி

குடத்தனை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர் முத்துக்கிருஷ்ணன் கதிர்காமலிங்கம் சிறந்த ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டார்.

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு கடந்த ஆண்டில் வலய ரீதியாக மேற்கொண்ட தேர்வின் அடிப்படையில் இவர் தெரிவு செய்யப்பட்டார். (12)

# உள்ளூராட்சி வார போட்டி முடிவுகள்!

யாழ்ப்பாணம்

யாழ்.மாநகரசபையினால் உள்ளூராட்சி வார நிகழ்வை முன்னிட்டு பாடசாலைகளுக்கிடையேயும், பொது நிறுவனங்களுக்கு இடையேயும் நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

கட்டுரைப்போட்டி

மேற்பிரிவு

1ஆம் இடம்-யோ.யூட்ஸ் கஜனி(திருக்குடும்ப கன்னியர் மடம்), 2 ஆம் இடம் -நா.ரேணுகா(பெரியபுலம் மகாவித்தியாலயம்), 3 ஆம் இடம்-ஹ.காஞ்சானா (நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை)

மத்தியபிரிவு

1ஆம் இடம்-அ.பிரசாந் (புனித பத்திரிசியார் கல்லூரி), 2ஆம் இடம்-ஜீ.ஜனந்தராஜ் (புனித பத் திரிசியார் கல்லூரி), 3 ஆம் இடம்- மு.துஷான் (புனித பத்திரிசியார் கல்லூரி)

கீழ்ப்பிரிவு

1ஆம் இடம்-அ.சவுந்தரம் ஜோ.சஞ்சுதன்(புனித பத்திரிசியார் கல்லூரி), 2 ஆம் இடம்-பி.பி.பிரகேஸ்வரன் அன்றோலைவ்ரன் ஜெவ்றி (புனித பத்திரிசியார் கல்லூரி), 3ஆம் இடம்-அ.வி.பெனிஸ்லஸ் துஷான் (புனித பத்திரிசியார் கல்லூரி)

பேச்சுப்போட்டி

மேற்பிரிவு

1ஆம் இடம் -நா.ரேணுகா(பெரியபுலம் மகா வித்தியாலயம்), 2 ஆம் இடம் - ச.சாருகேசி (இந்து மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம்- யோய்றோஸ் அன்ரன் (திருக்குடும்ப கன்னியர் மடம்)

மத்தியபிரிவு

1ஆம் இடம்-சி.அஜந்தன் (புனித பத்திரிசியார் கல்லூரி), 2ஆம் இடம்- ஜீ.ஜனந்தராஜ் (புனித பத்திரிசியார் கல்லூரி), 3 ஆம் இடம் - யோ.டிலக்ஷன் (புனித பத்திரிசியார் கல்லூரி)

கீழ்ப்பிரிவு

1ஆம் இடம்-அ.குயின்மேரி தரிஷியா (பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயம்), 2ஆம் இடம் அ.றொமோசிகான்(புனித பத்திரிசியார் கல்லூரி), 3ஆம் இடம் அ.சவுந்தரம் ஜோ.சஞ்சுதன்(புனித பத்திரிசியார் கல்லூரி)



ஐக்கிய நாடுகள் உலக குடித்தொகை நிதிய அனுசரணையுடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட அலுவலகத்தால் இளம் தலைவர்களுக்கு என நடத்தப்பட்ட மீள உற்பத்தி சுகாதாரக் கல்வி வழங்கல் வேலைத்திட்டத்தின் ஆரம்ப வைபவத்தில் தேசிய இளைஞர் சேவை மன்ற உதவி இயக்குநர் தி.சிவதெட்சனாமூர்த்தி உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

## தரம் 10 இற்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு செயலமர்வு

சுதுமலை

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 10 இல் கற்றும் மாணவர்களின் தமிழ் மொழிப்பாட அடைவை அதிகரிப்பது தொடர்பான கலந்துரையாடலும், செயலமர்வும் இன்று காலை 9 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடனான இந்தச் செயற்திட்டத்தின்கீழ் தரம் 10 இல் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்குப் மேலதிக வகுப்புக்களும் நடத்தப்படவுள்ளன.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைத் தவறாது அனுப்பி வைக்குமாறு, வலயப்பாடசாலைகளின் அதிபர்களை - வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (91)

## கைதடி பாலத்தில் விபத்துக்கள் அதிகரிப்பு

கைதடி

புதிதாக அமைக்கப்பட்ட கைதடி பாலத்தில் போக்குவரத்துச் செய்யும் வாகனங்கள் பருவகால மழை ஆரம்பித்ததையடுத்து, சறுக்கி விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அண்மையில் இந்தப் பாலத்தினூடாக பயணித்த ஹை ஏஸ் வாகனம் ஒன்று சறுக்கி விபத்துக்குள்ளானதில் சாரதி காயமடைந்தார். இதுபோன்று மோட்டார் சைக்கிள்களும் விபத்துக்குள்ளாகின்றன.

இதனால் சாரதிகள் வாகனங்களை அவதானத்துடனேயே செலுத்தவேண்டியுள்ளது.

ஏ - 9 வீதியால் தினமும் ஏராளமான வாகனங்கள் இந்தப் பாலத்தினூடாகப் பயணம்செய்வது குறிப்பிடத்தக்கது.

## பிரிவு உபசார விழா

மானிப்பாய்

வலிகாம வலய கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் பெற்றுச் சென்ற றெஜினா இருதயநாதனின் பிரிவு உபசார விழா எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரி யில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலய அதிபர்கள் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர். (72)

## 'பஞ்சாட்சரம் பா நாடகங்கள்' நூல் வெளியீடு

இணுவில்

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் எழுதிய 'பஞ்சாட்சரம் பா நாடகங்கள்' வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

அறிவாலய தலைவர் இ.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - வரவேற்புரையை ந.பரமேஸ்வரனும், ஆசியுரையை சரவணபவனும் (சிற்பி), வாழ்த்துரையை செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், வணிக பீடாதிபதி க.தேவராஜா ஆகியோரும், வெளியீட்டுரையை பேராசிரியர் சபா.ஜெயராசாவும் நிகழ்த்துவர்.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை எட்டு



பெயர் : வீ.வினுஜா

முகவரி : இரணைப்பாலை

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------------

முகவரி : ----------------

பிறந்த ஆண்டு : ----------------

சிறப்பன்தன் படிவம், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------

பெற்றோர் ஒப்பம்

## உதவி கோருகிறார்



கடுமையான இருதய நோயால் பாதிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு அளம்பில் இடைத்தங்கள் முகாமைச் சேர்ந்த இருதயநாதன் இருதயப் பிரகாஷ் தனது சத்திரசிகிச்சைக்காகக் கருணையுள்ளமுடையோரிடமிருந்து உதவியை எதிர்பார்க்கிறார்.

ஆபத்துமிக்க இருதய நோயால் பீடிக்கப்பட்டுள்ள இவருக்கு இருதய சத்திரசிகிச்சை 27.10.2005 இல் உடனடியாகச் மேற்கொள்ளப்படவேண்டும் என அப்பலோ வைத்தியசாலை மருத்துவர் சிவகுமார் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்தச் சிகிச்சைக்கு ஆறு இலட்சம் ரூபா தேவைப்படுவதால், இருதயப் பிரகாஷ் கருணையுள்ளம் உள்ளவர்களிடமிருந்து உதவியை எதிர்பார்க்கிறார். உதவ விரும்புவோர் வெள்ளவத்தை ஹற்றன் நஷனல் வங்கியிலுள்ள 90670956 எனும் இலக்க இந்திராணி இருதயநாதன் கணக்கில் வைப்புச் செய்யவும். அல்லது இலங்கை வங்கி S/A 24166 எனும் இலக்கத்தில் வைப்புச் செய்யுமாறு கேட்டுள்ளார்.

## கட்டாயக் கல்வி தொடர்பான செயலமர்வு

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண கல்வி வலய முறைசாரா கல்விப் பிரிவினரும், யுனிசெவ் நிறுவனத்தினரும் இணைந்து நடத்தும் செயலமர்வு இந்த மாதம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கட்டாயக் கல்வி வரவுக் குழுவை வலுப்படுத்தல் தொடர்பான இச் செயலமர்வில் கோட்டக் கல்விப் பணிப்பாளர், பிரதேச செயலர்கள், கட்டாயக்கல்வி வரவுக் குழுவில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை அதிபர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (91)


## வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்

வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கருத்தரங்கு இன்று காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் நடைபெறவுள்ளது.

மேலும் மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 16 ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளதால், பரீட்சை தொடர்பான மேலதிக விபரங்களை கருத்தரங்கின் போது பெற்றுக்கொள்ளலாம் என யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கச் செயலாளர் திருமதி.ஜெ.சரவணபவஐயர் தெரிவித்துள்ளார். (12)



# புதுமணத்தம்பதிகளிடையே விரிசலா?

(சென்றவாரத்தொடர்ச்சி...)


வெளிநாடுகளில் தற்போது இந்தப் பயிற்சி பிரபலமாகி இருக்கிறது. நம் நாட்டிலும் தற்போது சென்னை போன்ற நகரங்களில் திருமண ஆலோசனை மையங்கள் டொக்டர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அவற்றில் திருமண வாழ்க்கையில் உள்ள அத்தனை அம்சங்களுக்கும் முழுமையான பயிற்சி அளிக்கப்படுவதால், எந்த ஒரு புதுமணத் தம்பதியிடமும் விரிசல் ஏற்படுவதில்லை.

கணவன் - மனைவி உறவில் ஒருவரையொருவர் அதிகபட்சமாகப் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். பெரும்பாலான வீடுகளில் குழந்தை பிறந்து விட்டால், பிரச்சினை சரியாகிவிடும் என்று நினைக்கிறார்கள். இது தவறான ஒன்று. புது மணத் தம்பதிகளுக்கிடையே அப்படி என்னதான் பிரச்சினை? என்பதைக் கண்டறிந்து, அதைத் தீர்த்த பிறகுதான் குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும். புது மணத் தம்பதிகளைப் பொறுத்தவரை அவர்களின் தாம்பத்திய உறவில் இருவரில் யாருக்காவது திருப்தி இல்லாத நிலை உள்ளதா என்பதை அறிய வேண்டும். அப்படி இருந்தால் எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் பாலியல் நிபுணர்களிடம் சென்று ஆலோசனை பெறவேண்டும். இப்போதைய நவீன மருத்துவம் மூலம் இருபாலருக்கும் எந்தவித குறை இருந்தாலும் சரி செய்துவிடலாம்.


இந்த விடயத்தில் நிறைய புது மணத் தம்பதியர் தயக்கம் காட்டுகிறார்கள். இது நல்லதல்ல. குறை களை உடனுக்குடன் சரி செய்து கொண்டால், தாம்பத்திய உறவு இனிமையானதாகச் செல்லும்.


குறைகளை வைத்துக்கொண்டு இருவரும் சண்டை போட்டுக் கொள்வதால், எந்தவித தீர்வும் ஏற்படாது என்கிறார் பிரபல நிபுணரொருவர். ☆

## குழந்தையை குளிப்பாட்டும் போது...



குழந்தைகளைக் குளிப்பாட்ட தாய்மார் படும் துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல. குழந்தைகளைக் கெஞ்சி, ஆசை காட்டி, மிரட்டி, அழுத்து என்று பல உத்திகளைப் பயன்படுத்தி குளிப்பாட்டுவார்கள்.





உங்கள் செல்லக் குழந்தைகளைக் குளிப்பாட்டும்போது, முக்கியமாக கவனிக்க வேண்டியது - குழந்தையை குளிப்பாட்டு வதற்கு முன்னரே குளிப்பாட்டத் தேவையான சோப்பு, துவாய் போன்றவற்றை எடுத்து கொண்டு செல்ல வேண்டும். குழந்தையின் தலையில் நீரை ஊற்றிவிட்டு, பின்னர் துவாய் மற்றும் சோப்பையோ தேடிச் செல்லக்கூடாது. இது ஆபத்தை உருவாக்கும்.



சுடுநீரில் குழந்தையை குளிப்பாட்டும்போது, இதமான சூடான நீரா, என்பதை பார்த்துவிட்டுத்தான் குழந்தையை குளிப்பாட்ட வேண்டும். நமக்கு சூடு குறைவாக இருப்பது குழந்தையின் உடலில் அதிக சூடாக இருக்கும்என்பதைநினைவில் வைத்திருக்க வேண்டும்.



குழந்தை குளிப்பதற்கு வெறுப்பு காட்டினால், குளிப்பாட்டும்போது குழந்தைக்குப் பிடித்தமான பாட்டுபாடலாம். நல்ல உற்சாகமான கதைகளை சொல்லாம். இப்படிச் செய்வதால் குழந்தை உற்சாகமாக குளிக்க விரும்பும்.



குழந்தைக்கு உடலில் சோப்பு போடும் போது சோப்பு நுரை குழந்தையின் கண்கள், காது, மூக்கு போன்ற உறுப்புகளுக்குள் போகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். சோப்பு நுரை கண்ணில் பட்டு எரிவதால், குளிப்பதன் மேல் அவர்களுக்கு வெறுப்பு ஏற்படுகிறது. அத்துடன் அதிக நேரம் சோப்பு போடுவதும், சோப்பை உடலில் அழுத்தித் தேய்ப்பதும் நல்லதல்ல. தோலுக்குத் தேவையான எண்ணெய்த் தன்மை இல்லாமல் போய்விடுகிறது.

குழந்தையைக் குளிப்பாட்டும் அறை குளிரான அறையாக இருக்கக் கூடாது. குழந்தையின் உடலை துடைக்கும் துணி மிருதுவானதாக இருக்க வேண்டும். துடைக்கும் துணியை உடலில் வலிக்கும்படி அழுத்தித் தேய்க்கக்கூடாது.

குழந்தையின் உடலை நன்கு துடைத்தபின்னர் ஓடிக்கொலோன் பூசி அழுக்கு இல்லாத சுத்தமான ஆடை அணிவிக்க வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் குளித்த பின்னர் நல்ல சுத்தமான ஆடை அணிவார்கள் என்ற எண்ணத்தில் குழந்தை குளிப்பதற்கு தயங்க மாட்டாது.

அதுபோலவே குழந்தையைக் குளிப்பாட்டியவுடன் குழந்தைக்கான பவுடரை உடலில் பூசும்போது, புத்துணர்ச்சி பெற்றுவருவதுடன், குழந்தையை குளிக்க தூண்டுகிறது. குழந்தையை குளிக்க விட்டுவிட்டு வேறு வேலையில் கவனம் செலுத்தக் கூடாது. அப்படிச் செய்வதால், அம்மா தன்னை கவனிக்கவில்லை என்ற எண்ணம் குழந்தையின் பிஞ்சு மனதில் தோன்ற வாய்ப்புண்டு. குழந்தையை தினமும் குளிப்பாட்டியே ஆகவேண்டும் என்று நினைக்க வேண்டாம். மழை மற்றும் பனிகாலத்தில் குழந்தைகளை வாரத்துக்கு 3 நாட்கள் குளிப்பாட்டினால் போதுமானது.

## மயக்கும் இனிப்பு



பண்டிகை என்று வந்துவிட்டால், இனிப்புகள் இல்லாமல் போகாது. ஒருவருக்கொருவர் இனிப்புகளை வழங்கி மகிழ்வர். வீட்டுக்கு வீடு இப்படி நடைபெறுவது வழக்கம்தான். நம் வாயைக் கட்ட வேண்டிய நேரமாகவும் இது உள்ளது.

குறிப்பாக முதியவர்கள் இது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வாயைக் கட்டாமல் உண்டுவிட்டு, அதற்கு மருத்துவம் பார்ப்பது அறிவுடைமையல்ல. உண்பதற்கு ஏற்றதாக இல்லாத உணவுப் பண்டங்களைத் தவிர்த்து விட்டு, உடல் நலத்துக்கு ஏற்றவை எவை, செரிமானத்தை எளிதாக்கி வயிற்றுக்கு நலம் செய்பவை எவை என்று அறிந்து உண்ணவேண்டும். அப்போதுதான் வாழ்வு பொருளுள்ளதாகவும், மகிழ்ச்சிகரமானதாகவும் ஆகும்.

இனிப்புகளை எப்போதும் புதிதாகவே உண்ணவேண்டும். கவர்ந்திழுக்கும் விதத்தில் உள்ள இனிப்புகளைக் கண்டு மனம் மயங்கக் கூடாது. இனிப்புகளை நிறைய செய்து குவித்து, மாதக்கணக்கில் வைத்துக் கொள்வதும், பாதுகாப்பின்றி எல்லோருக்கும் எட்டும் இடத்தில் வைப்பதும் சரியல்ல. வரும்போதும், போகும் போதும் அவற்றைப் பதம் பார்த்துவிட்ட வயிறு சரியில்லை, பசியில்லை என்று புலம்பக்கூடாது.

இனிப்பு வகைகளில் செயற்கை நிறங்களையும், சுவையூட்டிகளையும் சேர்ப்பது குறித்து எச்சரிக்கை தேவை. அவை பார்வைக்கு நன்றாக இருக்கலாம். ஆனால் அவற்றில் உடலுக்கு நலம் செய்யும் எதுவும் இருப்பதில்லை. ஊட்டங்களும் இருப்பதில்லை.

## புனிதமானது நட்பு

நட்பு காதலை விட புனிதமானது. இரு உடல்களில் சங்கமம் காதல் என்றால், இரு உள்ளங்களின் ஒருங்கிசைவு நட்பு எனலாம். காதல் என்பது கவர்ச்சியில் உருவாகிறது. ஆனால் நட்பு அப்படியானதல்ல.

காதலை விட நட்பு உயர்ந்தது! காதலை விட நட்பு வலியது! எப்போதும் ஒரு பெண்ணிடம் கொள்ளும் காதல் சதை வசப்பட்டது. நட்பு என்போதும் முழுக்க மன வசப்பட்டது. நல்ல நட்புக்கு அமாவாசையோ, தேய்பிறையோ இல்லை. நட்பில் பொது நலமே என்றும் பூத்திருக்கும். காதலை விட நட்பு உயர்ந்தது. மகத்தானது.

உள்ளொன்று வைத்து, புறமொன்று பேசும் போது நட்பு கோவலமாகி விடுகிறது. நல்ல நண்பர்கள் ஒரு இதமான அதிகாலையைப் போன்றவர்கள்.



அவர்கள் நயமிகுந்த நல்ல கவிதையின் ஞாபகமூட்டலாகவே இருப்பார்கள். மாரி மழையும், கோடை வெயிலும், வசந்த தென்றலும், இலையுதிர் நாட்களும் கூட மாறி மாறிவரும். ஆனால் நல்ல நண்பர்களின் நினைவு மட்டும் என்றும் மாறாது. மங்காது நிலைத்து நிற்கும். அவர்களின் பிரிவு எனும் முள் இதயத்தைத் தைக்கும்போது, இதய தேசத்திலிருந்து செங்குருதிச் சொட்டுக்கள் வழிந்தோடும். விழிகள் இமைக்க மறுத்துவிடும் கண்கள் பனிக்கும்.

நல்ல நண்பர்களின் பிரிவு, வாழ்வின் அஸ்தமனமல்ல. அது மறு உதயத்தின் உண்மையான அறிகுறிகள். நட்பிலும், பகைமையிலும் நிதான வழியைக் கடைப்பிடிக்கவேண்டும். அன்பு குறையக் கூடாது. அன்பு அளவு மீறி அதிகரிக்கவும் கூடாது. அன்பளிக்க அன்பளிக்க அன்பு அடர்த்தி யாகும். பகிடிவதைகூட நட்புக்கு வழிகோலும் என்பது அர்த்தமற்ற முட்டாள் தனமான வாதம்.

உண்மையான நட்பு இதயத்திலிருந்து பண்பான நடத்தையால் கவரப்பட வேண்டியது. அது அராஜகத்திலும், அக்கிரமத்திலும் கட்டி எழுப்படமாட்டாது. அது நிலைத்து நிற்கவும் முடியாது.

ஒருவர் எம்மீது அன்பு காட்டுமுன்னரே நாம் அவர்மீது அன்பு காட்ட வேண்டும். கொடுப்பதில் உள்ளசுகம், பெறுவதில் இருப்பதில்லை. அன்பை தாரளமாகவும், ஏராளமாகவும் கொடுக்கவேண்டும். மற்றவர்களுக்காகக் கொடுத்து வாழ்வதில் விட்டுக் கொடுப்பதில் தான் மனித உறவே மலர்ந்து மணக்கிறது. சிரிப்பதற்கு 12 தசைகள் இருந்தால் போதும். கோபப்படுவதற்கு 120 தசைகள் இயங்க வேண்டும். எடுத்தற்தெல்லாம் கோபப்படும் போது, நட்பு சிதைவடைகிறது. கேட்பது பிச்சை மற்றவர் மனம் விரும்பி அளிப்பது அன்பளிப்பு, கேட்டால் நட்பு நலம் பெறாது.

அதனை நண்பர் விரும்பி வழங்கும்போது, மறக்கக் கூடாது. மறுப்பது அநாகரிகமான பண்பாடாகும். மறுக்கும்போது மனக்கசப்பு பெருமை உணர்வு வளர வாய்ப்புண்டு. நட்புக்கு நிகர் வேறு எது உண்டு?

# சுனாமி... ஒரு கடல் காவியம்

மனோன்மணி சண்முகதாஸ்

(28 ஆம் அத்தியாயம்)

கமலம்மாவின் கண்கள்.. அந்தக் குழந்தைகளை... உற்றுப் பார்த்தன! அந்தப் பிஞ்சு முகங்களில் சோகம் அப்பிக் கிடந்தது. பார்க்கப் பாவமாயிருந்தது! இந்தக் குழந்தைகள் என்ன பாவம் செய்ததுகள்! ஏன் இப்பிடி அலையுதுகள்!... அவளுடைய நெஞ்சில் ஒரு வலி!... நான் என்னபாவம் செய்தேன்? எத்தனை விரதம் பிடித்தேன்! எத்தனை கோயில் வலம் வந்தேன்! கடவுளுக்கு ஏன் இந்த ஓர வஞ்சகம்? எல்லாப் பெண்களுக்கும் குழந்தைப் பேற்றைக் கொடுக்காமல்... ஏன்? என்னைப் போல ஒரு சிலரை மட்டும்... வருத்துகிறார்! எல்லாம்.. நான் ... கொடுத்து வைத்த அளவுதானே!... அவள் பெருமூச்சு ...விட்டாள்.

'சின்னக்கிளி!... நீ போ! நான் இதுகளைக் கவனிக்கிறன்!...' சொல்லிவிட்டுக் கமலம்மா குழந்தையை ஏறிட்டுப் பார்த்தாள்!.

'அப்ப! நான் போட்டு வாறன்!...'

சின்னக்கிளி சொல்லிவிட்டு... அந்தப் பெண்குழந்தையை ஒரு முறை உற்றுப் பார்த்தாள்!... இதின்ர முகம் ... சரியா... என்ர பரிமளாவின்ர சாயல் அதே கண்!... அதே மூக்கு... அதே மூக்கு! நிமிஷ நேரத்தில் ஒப்பிட்டுப் பார்க்க அப்படியே அச்சாக இருந்தது. கீழே குனிந்து குடத்தைத் தூக்கும் போது அந்தப் பிள்ளையின்ர பாதங்கள் தெரிந்தன! இரண்டு பாதங்களிலும் சின்ன விரலோடு சேர இன்னொரு விரல்!... ஆறுவிரல்கள்.! .. திடீரெனச் சின்னக்கிளிக்குத் தன் அப்பாவின் கால்கள் நினைவுக்கு வந்தன. அவருடைய கால்களிலும் ஆறுவிரல்கள்! ஓ!.. இது ... ஒரே.. அடி கொடிதானே! மனதுள் எழுந்த நினைவை உடனே உதறிவிட்டுத் தண்ணீர்க் குடத்தை எடுத்து இடுப்பில் வைத்தாள். நிமிர்ந்து பையனின் முகத்தைப் பார்த்தாள். இவன் கூட அப்பாவின்ர சாயல்!... அவளுக்கு மீண்டும் நெஞ்சில் நினைவுகள் புரளத்தொடங்கின.!.. வேமாக நடந்து கடப்படிக்கு வந்தாள். கடப்பைக் கடக்குமுன் திரும்பி ஒரு முறை கமலம்மாவீட்டு விறாந்தையைப் பார்த்தாள். அங்கே தூரத்தில் வாத்தியாருடன் அந்த வெள்ளை வேட்டிக்காரன் பேசிக்கொண்டிருந்தது... மங்கலாகத் தெரிந்தது!. சின்னக்கிளி நடையை எட்டிப் போட்டுக் குடிசை வாசலுக்கு வரவும் மழை திரும்பவும் சோ! என்று கொட்டத் தொடங்கியது.

குடிசையுள் பரிமளா புத்தகத்துடன் குந்தியிருந்தாள். அவள் முகத்தில் ஆயிரம் கேள்விகள் தேங்கிக் கிடந்தன. வாய் திறந்தது!

' நல்ல வேளையம்மா!.. மழைக்கு முதல் வந்திட்டாய்!' பரிமளா எழும்பி வந்தாள்!. சின்னிக்கிளி அடுப்பில் இருந்த தணலைக் கிளறி பனம் பன்னாடையில் போட்டு கையில் வைத்து விசிறினாள். அது உடனே பற்றிக் கொண்டது. அத்தோடு சேர்த்து தென்னம் பாளையையும் அடுப்பில் செருக அடுப்புப் பற்றிக் கொண்டது. பரிமளா அவளையே கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்!... அம்மா இங்கே வந்த பிறகு எவ்வளவு சிக்கனமாகி விட்டாள். ஒரு நெருப்புக்குச்சு கூட வீணாக்க



மாட்டாள். தூள் விறகிலே சமையல் செய்கிறாள்! ... மலையிலே காட்டு விறகு... இங்கே கொக்காரையும், பன்னாடையும், தென்னோலையும்... வந்த புதிதில் விவரம் தெரியாமல் தென்னோலை வைத்து நீரைக் கொதிக்க வைத்து... தேநீர் போட்ட போது... அந்த புகை நாற்றம்... ! பின்னர் கமலம்மாவின் அறிவுரை... தோசை சுடுவதற்கு காவோலை... பால் காய்ச்சுவதற்குப் பாளை... மா வறுக்க தென்னம் மட்டையும், பனம் மட்டையும் பொங்குவதங்குத் தென்னம்பாளை... கருப்பணிகாய்ச்ச ஊமல்.. எல்லாவற்றையும் கமலம்மா தான் சொல்லித் தந்தா அதன் பிறகு அடுக்களையில் பிரச்சினை இல்லை. பரிமளா அம்மாவைப் பார்த்தாள். முகம் ஏதோ வாடியிருந்தது.

' அம்மா இரவைக்கு என்ன சாப்பாடு?...'

கேட்டபடி தம்பி வந்தான்.

'மழைக்குளிருக்கு ஏதாவது சூடாகச் சாப்பிட வேணும்...'

பரிமளா அவனைப் பார்த்தாள். இவன் சரியான சாப்பாட்டு ராமன் தான்... 'அம்மா! நான் தேங்காய் திருவித்தரட்டே'

வேண்டாம் பரிமளா'

'குழம்பு கிடக்கு... கொஞ்சம் தேங்காய் போடாமல் புட்டு அவிக்கப் போறன்!...'

'அம்மா !... அம்மா.... எனக்குக் குழல்புட்டு அவிச்சுத்தாம்மா!' தம்பி தன்னுடைய விருப்பத்தைச் சொல்ல.. சின்னக்கிளி அவளை உற்றுப் பார்த்தாள். இவன் தகப்பனைப் போல... சரியான... சாப்பாட்டு ராமன் தான்!... ' சரி நீ போய்படி... நான் குழல்புட்டு அவிச்சுப் போட்டுக் கூப்பிடுறன்...!' அம்மா சொல்லியதும் தம்பி குடிசைக்குள் ஓடிப்போனான். அவனுக்குப் பின்னால் நாய்க்குட்டியும் ஓடியது. அம்மா திருவலகை எடுத்து தேங்காய் திருவத்தொடங்கினாள்...!

' அம்மா!... நாளைக்குப் பள்ளிக் கூடத்தில எல்லாரும் படம் பார்க்கப் போகினம்!' அம்மா பரிமளாவை நிமிர்ந்து பார்த்தாள்.

' என்ன படம் ?' ... எங்கை பார்க்கப் போகினம்? அம்மாவின் கேள்வியில்... ஒரு சந்தேகம் தென்பட்டது.

'ஔவையார் படம்! நெல்லியடிக்குப் போகவேணும்.. பஸ்சுக்கும் காசு வேணுமம்மா!'

'எவ்வளவு வேணும்?'

'இரண்டு ரூபா மட்டும் தான்!...'

' என்னட்டை இப்ப காசில்லை! ம்ழையும் வந்திட்டுது!... இனிமேல் இடிப்புக் குத்தும் கஷ்டம்...'

அம்மாவின் பேச்சு பரிமளாவுக்கு... காசு கிடையாது என்பதை உணர்த்திற்று. ஆனால் வேறு வழியில் முயற்சி செய்தாள்!..

'அம்மா!... கமலம்மாவிட்டை கடனா வாங்கிப் போட்டுத் திருப்பிக் குடுப்பமே?'

படம் பார்க்கும் ஆவலால் யோசனையும் கூடவே வந்து விட்டது.

'அவவுக்கு நான் ஏற்கனவே 10 ரூபா குடுக்கவேணும். இனி கேக்க ஏலாது!... சின்னக்கிளி நிறுதிட்டமாகச் சொல்லிவிட்டுக் கூப்பன் மாவை எடுத்துப் புட்டுக் குழைக்கத் தொடங்கினாள். பரிமளா ஒன்றும் பேசாமல் குடிசைக்குப் போய் படிப்பு மேசையருகே குந்தினாள்!... அவள் மனம் பொருமிக் கொண்டிருந்தது. அம்மாவின் மேல் கோபம் வந்தது.

'அவருக்கு மட்டும் குழல் புட்டு வேணுமெண்ட உடனை அவிக்கிறா!...' எனக்கு மட்டும் ஒண்டும் செய்ய மாட்டா!. ஆம்பிளைப் பிள்ளை யெண்டால் உசத்தியே!'

பரிமளா பற்களை நெறுமினாள்..

'அக்கா!... என்னக்கா!...'

தம்பி மெதுவாகக் கேட்டபோது பரிமளா வெடித்தாள்.

'நீ பேசாமலிரடா! ... பெரிசா விசாரிக்க வந்திட்டார்'

அழுகையை அடக்கிக் கொண்டு கூறிய பரிமளாவை அவன் பரிதாபமாகப் பார்த்தான். அவளுக்குக் கிட்ட வந்தான்...

'அக்கா!.. நான் உனக்கு ஒரு உதவி செய்யட்டே'

'உன்னாலை என்ன செய்ய முடியும்?'

கோபத்தோடு பரிமளா சொன்னபோது அவன் ஒன்றும் பேசாமல் எழும்பிப் போனான். குடிசையின் ஈசான மூலையில் வளையில் மாட்டி இருந்த காளி படத்துக்குக் கீழே நிலத்தில் என்னவோ கிளறினான். பரிமளா அவனைப் பார்க்கவே இல்லை. நாளைக்கு நவராத்திரிப் பேச்சுப் போட்டிக்கான பந்தியை மனனம் செய்யத் தொடங்கினாள்..!

'நம்பினார் கெடுவதில்லை... அம்பிகையைச் சரண்புகுந்தால் யாவும் அவள் தருவாள்..'

திடீரென ஏதோ உடையும் சத்தம் கேட்டது. தம்பி தான் ஏதோ சாமிப்படத்துக்கு முன்னே போட்டு உடைத்திருக்கிறான். பரிமளா அவனைத் திரும்பிப் பாராமல் மீண்டும் மனனம் செய்யத் தொடங்கினாள். 'அம்பிகையைச் சரண்புகுந்தால் யாவும் அவள் தருவாள்' அடுக்களையிருந்து குழல்புட்டு மணத்தது...!

தம்பியின் குரல் அருகில் கேட்கப் பரிமளா நிமிர்ந்தாள்! அவளுக்கு முன்னே அவன் சில்லறையை அள்ளி வைத்தான். எல்லாம் 10 சதக் குற்றியள்....'இதிலை 2 ரூபா இருக்கு..' நீ கொண்டு போய்க் குடு அக்கா!..' 'உனக்கு ..ஏதடா!... காசு!... பரிமளா கேட்க நினைத்தாள் ஆனால் சுவாமிப்படத்துக்கு முன்னே உடைந்து கிடந்த 'சல்லிமுட்டி' கேட்க முடியாதபடி செய்துவிட்டது.

'அக்கா!... ஔவையார் படம் கட்டாயம் பார்க்க வேணும்'

அவன் ஒரு பெரியவரைப் போலச் சொன்னபோது... பரிமளா அம்மப்பாவையே நேரில் கண்டாள்... அவளுக்கு அழுகை வந்தது. 'நீ ... சல்லி முட்டிக்காசு.. அது திருவிழாவுக்கு எண்டு சேர்த்தது' பரிமளா தடுமாறினாள்.

'அது பிறகு பார்க்கலாம்! ... இந்தா இதைப்பிடி!...' அவன் அள்ளு காசாக கையில் தந்த போது பரிமளாவுக்கு அவன் பாலமுருகனாகத் தெரிந்தான். அம்மா ஆம்பிளைப் பிள்ளை எண்டு இவனைக் கொண்டாடவில்லை. இவன் ஒரு தெய்வப் பிறவிதான்!... இப்போது பரிமளா அவனைப் பார்த்த பார்வையில் வித்தியாசமிருந்தது.

'சரி... இரண்டு பேரும் சாப்பிட வாருங்கோ!...' அம்மாவின் குரல் அடுக்களையிலிருந்து கேட்டது பரிமளா சில்லறையை எண்ணி எடுத்துத் தையல் பெட்டியில் வைத்து மூடினாள். அம்மா வரும் அரவம் கேட்டது குடிசைக்குள் வந்து சின்னக்கிளி பார்த்தாள்...!

'யாரடி சல்லி முட்டியை உடைச்சது'

'அம்மா! நான் தானம்மா! அக்காவுக்குக் குடுத்திட்டன்'

தம்பி அம்மாவிடம் செல்லிவிட்டான்! அம்மாவின் கோபம் அடங்கிவிட்டது. அவள் அவன் கன்னத்தைச் செல்லமாக்கக் கிள்ள அவன் துள்ளி ஓடினான்!... ஓ!... இவன்....!

(தொடரும்...)

# கூந்தல் வளர்ச்சிக்கு...

'சீப்பு' உங்களுக்கென்று தனியாக வைத்துக்கொள்ள வேண்டும். வாரத்தில் மூன்று தடவை அதைக் கழுவ வேண்டும். உலோகத்தால் ஆன சீப்புகள் பாவிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

தேங்காயைத் தண்ணீர் சேர்க்காமல் அரைத்துப் பால் பிழியவும். இதை காய்ச்சும்போது எண்ணெய் தனியாக வரும். அந்த எண்ணெயைத் தலையில் தடவி ஊறியபின் சீயக்காய் அல்லது கடலை மாவு தேய்த்து முழுகலாம்.

நல்ல மரச்சீப்பினால் தலையை அழுந்த வாரினால், மயிர்க்கால்களில் இரத்த ஓட்டம் அதிகமாவதோடு முடி வளர்வதும் தூண்டப்படுகிறது.

நீங்கள் உபயோகிக்கும் ஷாம்பூவுடன் சில துளிகள் கிளிசரின் சேர்த்துக் கொண்டால் முடி அறுந்து போகாது.

இரண்டு கரண்டி வினிகருடன் கடலை மாவைக் குழைத்துக் கால் மணி நேரம் ஊறவைக்கவும். இதை நன்றாக மயிர்க்கால்களில் படும்படி தடவி அரை மணி நேரம் ஊறிய பிறகு கழுவி விடவும். பொடுகு போயே போச்சு!

அழுகின தேங்காயைத் தூக்கி எறியாமல், சுடுநீர் சிறிது சேர்த்து அரைத்து தலையில் தடவி ஊறவைக்கவும். பிறகு நன்றாக 'மஸாஜ்' செய்யவும். மயிர்க்கால்கள் வலுப்பெற சிறந்த வழி.

முடி எல்லோருக்கும் அடர்த்தியாக வளரும் என்று சொல்ல முடியாது. இது பரம்பரையாக வருகின்ற சொத்து என்பது தான் உண்மை. அதே போல் தான் வழுக்கை விழுவதும்.

விற்றமின் 'பி' குறைபாட்டினால் விரைவில் தலைமுடி வெளுக்க ஆரம்பிக்கும். ஊட்டம் மிக்க உணவு இந்தக் குறைபாட்டை நீக்கும்.

நெல்லிக்காயையும், ஊறவைத்த வெந்தயத்தையும் நன்றாக அரைத்து, அந்த விழுதைத் தலையில் தடவி, ஊறவைப்பது குளிர்ச்சியைத் தரும். கண் எரிச்சலைப் போக்கும்.

விளக்கெண்ணையைப் போல் குளிர்ச்சி தருவது வேறு எதுவுமே இல்லை. விளக்கெண்ணெய் இரண்டு மேசைக் கரண்டி, தேங்காய் எண்ணெய் ஒரு மேசைக்கரண்டி எடுத்து இலேசாகச் சுட வைத்து, மயிர்க்கால்களில் நன்றாகப் படும்படித் தடவி விடவும். ஒரு பழைய துணியை வெந்நீரில் நனைத்துப் பிழிந்து, தலையின் மீது சுற்றவும். அந்தச் சூடு உள்ளே இறங்கும். சற்று ஆறியதும் மீண்டும் அவ்வாறு செய்யவும். பிறகு தலையைச் சாம்பூ போட்டு அலசி விடவும். முடி உதிராமல் காக்க முத்தான வழி.


கூந்தல் வறண்டு இருந்தால், ஒரு கிண்ணத்தில் மருதாணிப் பொடி, தேங்காய்ப் பால், தேங்காய் எண்ணெயும் சேர்த்துக் குழைத்து தலையில் மஸாஜ் செய்யவும். அரைமணி நேரம் கழித்து முழுகலாம்.

தலைமுடிக்குப் போஷாக்குத் தரும் ஷாம்பூ பவுடர் வீட்டிலேயே தயாரிக்கலாம். ஒரு பங்கு சீயக்காய், வெந்தயம் கால் பங்கு, பச்சைப் பயறு அரைப்பங்கு, புங்கங்காய் கைப்பிடி எடுத்து மிஷினில் அரைத்து வைத்துக் கொள்ளவும். இரசாயனப் பொருள்கள் இல்லாதபொடி, எந்தவிதத் தீங்கும் ஏற்படுத்தாது. முடியும் வளரும்.

### முடி பளபளக்கக் காய்கறி வைத்தியம் இதோ

வெங்காயத்தையும், முட்டைக் கோஸையும் பொடிப்பொடியாக நறுக்கி (ஒரு கப்) அதை இரவு முழுவதும் ஒரு செப்புப் பாத்திரத்தில் போட்டு வைக்கவும்.

இந்தச் சாற்றுடன் தேங்காய் எண்ணெய் கலந்து மயிர்க்கால்களில் படும்படி நன்றாக மஸாஜ் செய்யவும். சீயக்காய்ப் பொடி போட்டுக் குளித்தால் முடி பளபளப்பாக மென்மையாக....



நேரமில்லை என்பவர்கள் சாதம் வடித்த கஞ்சியில் வெந்தயப் பொடி, பயத்தமாவு கலந்து ஊறவைத்துத் தேய்த்துக் கொள்ளலாம்.

### இளநரையைத் தடுக்க எளிய வழி

கறிவேப்பிலைத் துவையல்தான் சிறந்தது. கீரை, பூசணிக்காய், பசும்பால், வெங்காயம் ஆகியவற்றை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் இளநரையைத் தடுக்கலாம்.

# கடற்தொழிலில் ஈடுபடுவதன் மூலம் வருவாயை பெருக்கிக்கொள்ள முடியும்

## மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர்

வடமராட்சி கிழக்கு

சுனாமியின் பின்னர் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களில் முதல் தொகுதியாகவும் , கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இரண்டாவது தொகுதியாகவும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். என வன்னி மாவட்ட மனிதமுன்னேற்ற நடுநிலைய (கியூடெக்) இயக்குநர் அருட்தந்தை ஜீ.பீற்றர் அடிகளார் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் கியூடெக் நிறுவனத்தால், கடற்தொழிலாளர்களுக்கு படகு வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனங்கள் 1974 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கி வருகிறது கடந்த காலங்களில் போர் அனர்த்தங்களால் மக்கள் பாதிக்கப்பட்ட வேளைகளில், அவர்களின் துயர் துடைக்கும் பணிகளில் ஈடுபட்ட கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம், யாழ்.குடாநாட்டை விட்டு மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்த வேளை, தானும் இடம் பெயர்ந்து வன்னிப் பெருநிலப்பரப்பில் மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வந்துள்ளது. மக்களோடு மக்களாக இடம் பெயர்ந்த இந்த நிறுவனம் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் அகதிகளாய் தங்கி வாழ்ந்த மக்களுக்கு உலருணவுப் பொருட்கள், கடற்தொழில் உபகரண உதவி, சுயதொழில் கடன்கள், நடமாடும் வைத்திய சேவை, ஆகிய உதவிகளைச் செய்து வந்துள்ளது.

அதன் ஒரு பகுதியாக கடற்தொழில் உதவித் திட்டத்தின் கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 187 படகுத் தொகுதிகளை கையளிக்கின்றோம். வெற்றிலைக் கேணிக் கிராமத்தில் 150 நிரந்தர வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ், வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் வேலைகளை ஆரம்பித்துள்ளோம். வீடு பெறும் கடற்தொழிலாளர் குடும்பங்களுக்கு மேலுமொரு (சுமார் 125) படகுத் தொகுதிகளையும் வழங்கவிருக்கிறோம்.

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனங்கள் யாழ். மறைமாவட்ட ஆயரின் பொறுப்பிலேயே இயங்குகின்றன. சகல நிவாரணப் பணிகளும் அவரூடாகவே முன்னெடுக்கப்படுகின்றன. எல்லோரையும் சமத்துவமாகப் பாவித்து மக்களின் வாழ்வாதாரங்களை உயர்த்த வேண்டிய பொறுப்பு எம்முடையதே.

இப்போது கூட சுனாமியின் பின் 10 மாதங்கள் முடிவடைந்த நிலையிலும், பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு உடனடியாக படகுத் தொகுதிகளை கொடுத்துதவ முடியாத நிலையில் உள்ளோம். தும்புக் கண்ணாடி இழைப் படகுகள் தயாரிப்பதில் தாமதம், வெளியிணைப்பு இயந்திரங்கள் வலை மற்றும் உபகரணங்களை இறக்குமதி செய்வதில் தாமதம், இங்கே பொருட்களை எடுத்துச் செல்வதில் ஏற்படும் தாமதம் ஆகிய காரணங்களால் இவை உடன் வழங்குவதில் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றோம் இந்த நிலையிலும் இவைகளை முழுமையாக கூடிய கெதியில் தந்துதவோம். இவைகளை நல்ல முறையில் பயன்படுத்துவதன் மூலம் வருவாயைப் பெருக்கி நீங்கள் ஒவ்வொருவரும் வளமாக வாழ முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை கரித்தாஸ் - கியூடெக் வன்னி மாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜீ.பீற்றர் அடிகள், தாளையடி உதவிப் பங்குத் தந்தை அடிகள் தாளையடி கடற்தொழில் பரிசோதகர் ந.கணேஷமூர்த்தி தாளையடி உப அஞ்சல் அதிபர் மா.நிர்மலாதேவி வடமராட்சி கிழக்கு காவற்துறைப் பணிமனைப் பொறுப்பாளர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறைப் பெறுப்பாளர் அ.நிலவன் ஏற்றிவைத்தார். இந்த நிகழ்வின் சிறப்புரையை கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் வணபிதா ஜீ.பீற்றர் ஆடிகள், தாளையடி பங்குத் தந்தை நேசன் அடிகள், தாளையடி கடற்தொழிலாளர் பரிசோதகர் கணேசமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தினர்.

தெரிவு செய்யப்பட்ட பயனாலிகளுக்கான படகுகளை வன்னி மாவட்ட கியூடெக் நிறுவன வணபிதா பீற்றர் அடிகள், தாளையடி உதவிப் பங்குத் தந்தை வணபிதா நேசன் அடிகள், கடற்புலிகளின் வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் அ.நிலவன் ஆகியோர் வழங்கி வைத்தனர். (21)

# மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் சிறப்புற நடைபெற்ற சிறுவர் முதியோர் தின விழா

வடமராட்சி கிழக்கு

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சிறுவர், முதியோர் தினவிழா நேற்று மாலை 2 மணிக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் கே.ரி.ஜெயசீலன் தலைமையில் மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன்வித்தியாலயத்தில்நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமராட்சி கிழக்கு கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் கலந்து சிறப்பித்தார்.

சிறப்புவிருந்தினராக வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் அ.நிலவன், வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வீ.எஸ்.தியாகராசா, வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மு.தங்கவேலு, வடமராட்சி கிழக்கு தென்னை - பனை வள அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர் ந.யோகராசா, வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்புக்குழுத் தலைவர் எஸ்.பொன்னம்பலம் ஆகியோர் கலந்துகொண்டனர். (21)

# முல்லைத்தீவு நுண்கலைக் கல்லூரிகளுக்கிடையிலான கலைத்திறன் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

முல்லைத்தீவு

தமிழீழப் பெண்கள் எழுச்சி தினத்தையொட்டி முல்லைத்தீவு மாவட்ட அன்னையர் முன்னணியினரின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட நுண்கலைக் கல்லூரிகளுக்கிடையில் நடத்தப்பட்ட 'கலைத்திறன்' போட்டி முடிவுகள்

**கட்டுரை**

கீழ்ப்பிரிவு-1ஆம் இடம்- யோ.கௌசிகா (மல்லாவி நுண்கலைக்கல்லூரி),

மத்தியபிரிவு-1ஆம் இடம்- ச.துவாரகா (மல்லாவி நுண்கலைக் கல்லூரி), யோ.உஷாந்தினி (புதுக்குடியிருப்பு)

மேற்பிரிவு - ச.சுபசங்கர்- (மல்லாவி)

**பேச்சு**

கீழ்ப்பிரிவு- 1ஆம் இடம் சு.மதுசுஜா (மல்லாவி),2ஆம் இடம்- ஜெ.ஆன்றொசானா, (புதுக்குடியிருப்பு),


மத்தியபிரிவு- ச.துவாரகா (மல்லாவி),

**கவிதை**

மத்தியபிரிவு - 1ஆம் இடம்- ந.தரண்யா (முள்ளியவளை), 02 ஆம் இடம்- தர்சானந்தி (புதுக்குடியிருப்பு), 02ஆம் இடம் மா.உமாறமணி (மல்லாவி),

மேற்பிரிவு

1ஆம் இடம்- கோ.கோசலா (முள்ளியவளை), 2ஆம் இடம்- சி.ஜசிந்தா (மல்லாவி) ஆகியோரே இந்தப் போட்டியில் வெற்றியீட்டியவர்களாவார்.



கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற சுகாதாரக் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்ட அறிவுறுத்தல்களை படங்களில் காணலாம்.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

**ஒக்ரோபர் - 14**

*1892:* உலர் மின்கலத்தைக் கண்டுபிடித்து புகழ் பெற்ற பிரான்ஷிய விஞ்ஞானி ஜியார்ஜ் லெக்ளாஞ் பாரிஸ் நகரில் காலமானார்.

*1901:* பாண்டித்துரைத் தேவரால் நான்காம் தமிழ்ச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

*1905:* இத்தாலியில் மாண்ட ரெஸ்ஸோ என்னுமிடத்தில் கடும் நில நடுக்கம் ஏற்பட்டது. இதில் மூவாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் மரணமடைந்தனர்.

*1917:* ரஷ்யா குடியரசு நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. ஆட்சிப் பொறுப்பு ஐவரைக் கொண்ட குழுவிடம் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

*1919:* ஆயுதங்கள் கொள்வனவு செய்வதற்காக ஆறு லட்சம் பவுண்ட்ஸ் தந்தால், தனது வீரர்கள் ஐந்து லட்சம் பேரை மொஸ்கோவை நோக்கி அனுப்புவதாக போலந்து பிரதமர் ரஷ்யப் பிரதமருக்கு தெரிவித்தார்.

*1929:* அமெரிக்கா சர்வதேச நீதிமன்றத்தில் இணைந்து கொண்டது.

*1956:* மூளையில் சில நரம்பு இணைப்புக்களைத் துண்டிப்பதற்காக லோபொட்டோமி என்றழைக்கப்பட்ட மடல் வெலி அறுவைச் சிகிச்சை முதன் முதலாக அமெரிக்காவில் நடைபெற்றது.

*1960:* கொங்கோவில் கேர்னல் ஜோசப் மொபுட் தலைமையில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது. சில காலமாக இரு பிரதமர் இரு அரசு என இருந்துவந்த அரசியல் நிலையைத் தூக்கி எறிந்து விட்டு பெரும்பாலும் மாணவர்களை உள்ளடக்கியதான புதிய அரசை மொபுட் அமைத்தார்.

*1978:* வெனிரா - 2 என்ற விண்கலத்தை ரஷ்யா வெள்ளிக் கிரகத்தை நோக்கி அனுப்பியது. இது வெள்ளிக்கிரகத்தில் இடி முழக்கங்களைப் பதிவு செய்து பின் நாளில் அனுப்பியிருந்தது.

*1981:* முதன் முதலாக அதி வேகமாகச் செல்லும் புல்லட் புகையிரத சேவை பாரிசில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

*1982:* கிழக்குப் பெய்ரூட்டில் கிறிஸ்டியன் பாலங்கிஸ்ட் கட்சியில் தலைமை அலுவலகத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்புக் காரணமாக லெபனான் ஜனாதிபதி பஷீர் கெமாயிலுக் மற்றும் எட்டுப் பேர்களுடன் பலியானார்.

*1984:* வட பகுதிக் கடலில் மீன்பிடிப்பதற்கான தடை முதன் முதலாக அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

*1991:* தென்னாபிரிக்காவில் கறுப்பு இனத்தவர்களிடையே ஏற்படும் வன்முறைகளைத் தவிர்ப்பதற்காக தென்னாபிரிக்க அரசு, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், இங்காதா சுதந்திரக் கட்சி ஆகிய முத்தரப்பும் உடன்படிக்கையில் ஒப்பமிட்டன.

*1993:* வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி பில் கிளிங்டன் தலைமையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் வைத்து இஸ்ரேலும், பலஸ்தீன விடுதலை இயக்கமும் உடன்படிக்கை ஒன்றில் ஒப்பமிட்டுக் கொண்டன.

*: சீனாவின் ஜனநாயக இயக்கத் தலைவர் வெய் ஜிங்ஷன் 15 வருட கால சிறை வாசத்தின் பின் விடுதலை செய்யப்பட்டார்.

* : உலக தரநிர்ணய நாள்.

தொகுப்பு- சந்துரு

# 2 கிலோ போதைப் பொருளுடன் இந்திய பிரஜை மன்னாரில் கைது!

மன்னாரிலிருந்து கொழும்புக்குச் சென்ற பஸ்ஸில் 75 லட்சம் ரூபா பெறும்தியான போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

மன்னாரில் பெருமளவு போதைப் பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து, அங்கு நாளாந்தம் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பஸ் வண்டியொன்று நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் மன்னார் சோதனைச் சாவடிக்கருகில் நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டது.

அந்த பஸ்ஸில் பயணம் செய்த தமிழ்நாடு மதுரையைச் சேர்ந்த பயணியொருவர் மீது சந்தேகம் கொண்ட பொலிஸார், அவரைச் சோதனையிட்ட போது தற்கொலை அங்கியைப் போன்ற அங்கியொன்றைஅவர் அணிந்திருந்ததைக் கண்டுபிடித்தனர்.

2 கிலோ எடை கொண்ட பிறவுண்சுகர் போதைப் பொருளை இவர் அந்த அங்கிக்குள் வைத்து அணிந்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

தன்னுடன் இந்தியாவிலிருந்து வந்த மற்றுமொருவரே தனக்கு இந்தப் பையைத் தந்ததாகவும் அவர் அதற்கு முன்னர் கொழும்பிற்குச் சென்ற பஸ்ஸில் சென்றுவிட்டதாகவும் கைது செய்யப்பட்ட நபர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

# கருவாடு பதனிடுதல் தொழில் முயற்சி

முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு கருவாடு பதனிடுதல் தொழில் முயற்சியை மேற்கொள்வதற்கென - கரித்தாஸ் -கியூடெக் நிறுவனம், மகளிர் சகோதர பகிர்வாழ்வுச் சங்கங்களூடாக பண உதவி வழங்கவிருப்பதாக வன்னி மாவட்ட கரித்தாஸ் - கியூடெக் நிறுவன இயக்குனர் வணபிதா ஜீ.பீற்றர் அடிகளார் தெரிவித்துள்ளார்.(21)

நமது ஈழநாடு

வைர வரிகள்

உயர்ந்த மனிதர்களுக்கு இலட்சியங்கள் உண்டு. மற்றவர்களுக்கு ஆசைகளே உண்டு.
-வாஷிங்டன் இர்விங்.

## நமது நோக்கு

# அறிவுத்தேடலைப் பாதிக்கும் அருகிவரும் வாசிப்புப் பழக்கம்

இது 'வாசிப்பு' மாதம்!

வாசிப்பவன் யோசிப்பவனாகிறான் என்பது அறிஞர் வாக்கு.

நல்ல நூல்களே நல்வழிகாட்டி... நல்ல சிந்தனையுடன் கூடிய வாழ்நெறியில் ஒருவனுக்கு தெளிவான பாதையை காட்டி வழிநடத்த மௌன உபதேசியாக துணைபுரிவது அவன் வாசிக்கும் நூல்களேயாகும்.

கற்றல் - கேட்டல் - தெளிதல் - சிந்தித்தல் - செயற்படுதல் என்ற மனிதவாழ்வின் இயக்கச் சுற்றுவட்டத்தில், கற்றலுக்கான மூலாதாரம் நூல்களேயாகும்.

'நீ பழகும் நண்பனைக் கொண்டு உனது பண்பையும், நீ படிக்கும் நூல்களைக் கொண்டு உனது கலாசாரத்தையும் அறிவுசார் தகைமையையும் மதிப்பிடமுடியும்' என்ற வார்த்தைகள் சுமந்துநிற்கும் அர்த்தம் மிகமிக ஆழமானது மட்டுமல்ல கனதியானதும்கூட...

ஆனால், இந்தத் தத்துவம் கூறும் கருத்தின் மேன்மையை இன்றைய காலகட்டத்தில் எமது மக்கள் புரிந்துகொள்ளாதவர்களாகி, 'வாசிப்பு' என்ற மாபெரும் மனித தேவையின் அவசியத்தை புறந்தள்ளுவதன் மூலம், தம்மைத்தாமே மந்தபுத்தியுள்ளவர்களாக்கி வருவதுதான் துயரம் தரும் விடயமாகும்.

இன்று வெகுசன தொடர்பு ஊடகங்களின் 'நவீனத்துவத்' தன்மைகளும், இலத்திரனியல் சாதனங்களும் அற்புதமானதும், பிரமிக்கவைப்பதுமான புதிய புதிய கண்டுபிடிப்புக்களை மானுட சமூகத்துக்கு வழங்கி வருகின்ற சூழ்நிலையில் 'வாசிப்பு' என்ற அறிவுத்தேடல் முறையை புறமொதுக்கிவிடும் செயற்பாடு எம்மிடையே வேகமாக பரவி வருவது வேதனைக்குரியதாகும்.

இன்றைய அறிவியல் தொழில்நுட்பம் உலகை நம் விரல் நுனிவரை கொண்டுவந்து சேர்த்திருந்தாலும்கூட ஆழமாக-அமைதியாக ஆறுதலாக வாசித்தல் மூலம் கிடைக்கும் அறிவுசார் சிந்தனைத்தேடல்கள் - ஞானம் என்பது ஒருவனுக்கு கிடைக்குமா என்பது சந்தேகமே!

நவீன அறிவியல் சாதனங்கள் பலவற்றை கற்றல் முயற்சிகளைத் தூண்டுவதற்காகவும், இலகுபடுத்துவதற்காகவும் கண்டுபிடித்து மனித குலத்திற்கு வழங்கிவரும் விஞ்ஞானம் வளர்ச்சி கண்டுள்ள நாடுகளில்கூட, புதிது புதிதாக நூல்களும், பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளும் பல்வேறு துறைகளில் பெருமளவில் வெளிவந்த வண்ணமிருப்பதை நாங்கள் கவனத்திலும் கருத்திலும் கொள்வது அவசியமாகும்.

இது அவர்களின் வாசிப்புப் பழக்கமானது மேலும் மேலும் வளர்ந்துவருவதையும், இலத்திரனியல் அறிவூட்டல் ஊடகங்கள் பெருமளவில் தற்கால சமூகத்தை ஆக்கிரமிக்க முயன்றாலும்கூட, அதனின்றும் விடுபட்டு நல்ல நூல்களை, பத்திரிகைகள் - சஞ்சிகைகளை புதிது புதிதாகத் தேடி வாசித்து தமது அறிவை வளர்க்கும் செயற்பாட்டை வாழ்வின் அவசியமாக்கி அவர்கள் பயன்பெற விளைகின்றனர் என்பதையும் துல்லியமாக எடுத்துக்காட்டுவதாகவும் உள்ளது.

பெரியோர்களிடம் மட்டுமல்லாது இவ்வாசிப்புப் பழக்கம் குழந்தைகளிடமும் சிறுவர்களிடமும் பெருமளவில் வேரூன்றி வளர்வதையே வெளிநாடுகளிலிருந்து பல்வேறு மொழிகளிலும் வெளிவந்து குவிந்துகொண்டிருக்கும் குழந்தை இலக்கியங்கள், அறிவியல் நூல்கள் போன்றவைகள் நிருபித்து நிற்கின்றன.

இதற்கு மிகச்சிறந்த உதாரணம் அண்மையில் வெளியாகி கோடிக்கணக்கில் விற்பனையாகி சாதனை படைத்த ஹாரி பொர்ட்டர் (Harry porter) என்ற நூலாகும்.

சிறுவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை நாம் ஏற்படுத்தாவிட்டால், அது எதிர்காலத்தில் பாரதூரமான சிந்தனைப் பிறழ்வை அவர்களிடையே ஏற்படுத்துவதுடன், நூலகத்தைப் பயன்படுத்தும் பழக்கமற்றவர்களாக அவர்களை மாற்றி மந்த புத்தியுள்ளவர்களாகவும் அவர்களை ஆக்கிவிடும் என்பதே உண்மையாகும்.

வாசிப்புப் பழக்கம் வீட்டில் - குடும்பத்தில் ஆரம்பிக்கப்பட்டாலே அது ஆக்கபூர்வமானதாக அமையும்.

பெற்றோர் தாம் வாசிக்க பத்திரிகைகளையோ, சஞ்சிகைகளையே வாங்கும்போதோ, நூலகங்களில் இரவல் எடுக்கும்போதோ தங்களின் பிள்ளைகளுக்கும் அவர்களுக்குரிய நூல்கள் சஞ்சிகைகளை எடுத்துச் சென்றும் வாங்கியும் கொடுத்து அவர்களை வாசிக்கத் தூண்டி உற்சாகமூட்டவேண்டும்.


பாடசாலைகளில் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் நூலகத்தைப் பயன்படுத்த அறிவுறுத்தவேண்டும்.

வெறுமனே சுயதேடலுக்கு வழிகாட்டாத - பாடசாலைப் படிப்பு என்பது எந்த மாணவனையும் அறிஞனாக்காது என்பதை புரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

ஒருவரின் அறிவுரீதியிலான தேடலுக்கும், சுயசிந்தனை வளர்ச்சிக்கும் மிகவும் அவசியமான வாசிப்புப் பழக்கத்தை சிறுவயதில் இருந்தே பழக்கப்படுத்த பெற்றோரும், ஆசிரிய சமூகமும் மாணவர்களுக்கு அறிவூட்ட முன்வருவது காலத்தின் தேவையாகியுள்ளது.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# பிரித்தாளும் தந்திரத்தைத் தடுக்க கொலைகளைத் தடுக்க வேண்டும்!

யாழ்ப்பாணத்தில் இரண்டு பெரிய கல்லூரிகளின் அதிபர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். கல்வியியலாளர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும் இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாமல் தடுப்பதற்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒருவாரகாலத்துக்கு வகுப்புக்களை மாணவர்கள் பகிஷ்கரிக்க முடிவுசெய்து, பகிஷ்கரித்து வருகின்றனர். பரவிவரும் கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய அவசியத்தை மாணவர்கள் உணர்த்துவதற்கு முன் வந்திருப்பதை வரவேற்க வேண்டும் என்று சொன்னபடி வந்தார் பரமசிவம்.

பிரித்தாளுவதில் பிரிட்டிஷார்தான் வல்லவர்கள் என்று முன்பு இந்திய விடுதலைப் போராட்டம் உச்சக்கட்டத்திலிருந்த சமயத்தில் எடுத்துக்கூறப்பட்டது. இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் மட்டுமல்ல எங்கெல்லாம் வெள்ளையரின் ஆட்சிக்கெதிராக விடுதலைப் போராட்டங்கள் நடந்தனவோ அங்கெல்லாம் அவர்கள் இந்தப் பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டு சுதேசிகளுக்குள் மோதலை ஏற்படுத்தி பெரும் குழப்பத்தையும், அழிவையும் உண்டாக்கினர். ஆனாலும் அந்த நாடுகளின் விடுதலைப் போராட்டங் களை முற்றாக ஒழித்துக் கட்டவோ மக்களின் விடுதலை உணர்ச்சியை அடக்கவோ முடியாமல் போனது. வெள் ளையர்களின் தந்திரத்தை அறிந்து, புரிந்து, உணர்ந்துகொண்ட மக்கள் தங்கள் ஒற்றுமையினாலும் உறுதியான போராட்டங்களினாலும் விடுதலை பெற்றனர். இலங்கையில் சிங்கள பௌத்த ஆதிக்க சக்திகள் பிரிட்டிஷாரையும், தோல்வியடையச் செய்யுமளவுக்குப் பிரித்தாளும் தந்திரத்தில் வெகுவாக முன்னேற்றம் கண்டிருக்கின்றனர் என்று நான் சொன்னேன்.

*1983 ஆம் ஆண்டுக்கு முன்னர், 1956ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்களுக்கு எதிராக காலத்துக்குக் காலம் நாடு முழுவதும் இனக் கலவரத்தைத் தூண்டி விட்டுப் பரப்பி தமிழ் இன் அழிப்பில் ஈடுபட்டு வந்தனர். இனப்படுகொலையில் மட்டுமல்லாது தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் மூலம் தமிழ் மண்ணையும் அபகரித்தனர். சிங்களம் மட்டுமே உத்தியோக மொழி என்ற சட்டம் கொண்டு வந்து அரசாங்க சேவையில் தமிழர் வேலைவாய்ப்புப் பெறாமல் தடுக்கப்பட்டனர். வேலை வாய்ப்பை இழந்த தமிழ் இளைஞர் விவசாயம் தோட்டச் செய்கையிலீடுபட்டுத் தமது பொருளாதார வளத்தைப் பெருப்பித்தபோது அப்பொருட்களை இறக்குமதி செய்து தமிழர்களின் பொருளாதார முன்னேற்றத்தைத் தடுத்தனர். தமிழ் மக்கள் தாம் வாழ்வதற்கு தமது தாயகத்துக்கு விடுதலை கேட்டு சாத்வீகமாகப் போராடியபோது - அதை ஆயுத பலம் கொண்டு அடக்கி ஒடுக்க முற்பட்டதுடன் இலங்கையில் தமிழ் இனத்துக்கென ஒரு பிரதேசமும் கிடையாதெனத் தெரிவித்து தமிழ் இனத்தை அழிப்பதற்கு இனப்படுகொலையில் இறங்கினர். இந்த நிலையில்தான் தமிழ் இளைஞர்கள் தம்மையும் தமது இனத்தையும், தமது மண்ணையும், பாதுகாப்பதற்காக ஆயுதம் ஏந்திப் போராடத்தொடங்கினர் என்று பரமசிவம் சொன்னார்.*


தமிழ் இளைஞர்களில் ஆயுதம் ஏந்திய சிலர் சிங்கள பௌத்த ஆதிக்க சக்திகளின் தந்திரங்களில் அகப்பட்டுத் திசைமாறினர். விடுதலைப் போராட்டங்கள் நடைபெற்ற பல நாடுகளில் போலவே விடுதலைப் போராட்டத்தை வீறுகொண்ட போராட்டமாக முன்னெடுத்து பல் வேறுதுறைகளிலும் முன்னேற்றம் காண்பதற்கும், போர்க்களத்தில் வெற்றியை எட்டுவதற்கும்

விடுதலைப் புலிகள் திட்டமிட்டுச் செயல்பட்டனர். இதன் மூலம் தமிழர் தாயகத்தில் பெரும்பாலான பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தமிழீழ நிர்வாகத்தை அமைத்துள்ளனர். இந்த நிலையில் விடுதலைப் போராட்டத்துக்குள் பிளவை ஏற்படுத்தி போராட்டத்தைச் சீர்குலைக்க ஆதிக்க சக்திகள் முனைந்தன. இதில் அவர்கள் ஓரளவு வெற்றி பெற்று கிழக்கில் ஒரு கோடரிக்காம்பைப் பிடித்தனர். இதைச் சாட்டாக வைத்துக்கொண்டு அரச புலனாய்வுத்துறையும், அரச படைகளும் தமிழ் மக்கள் மத்தியில் தமிழர் தாயகப் பகுதியில் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றனர் என்று சொன்னேன்.

இதே சமயம் வெளிநாடுகளில் விடுதலைப் போராட்டத்தில் வெற்றி கண்டு வரும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாகவும், புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழுத்தம் கொடுக்கும்படியும் சர்வதேச சமூகத்தை ஆதிக்க சக்திகள் கோரி வருகின்றனர். இதே சமயம் புலிகள் கொலை செய்கிறார்கள், சிறுவர்களைப் படைக்குச் சேர்க்கிறார்கள். அவர்களை வெளிநாடுகள் தடைசெய்ய வேண்டுமென்றும் வெளிநாடுகளில் பிரசாரம் செய்கிறார்கள் என்று பரமசிவம் சொன்னார்.

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படவேண்டுமென்றும் பேச்சுவார்த்தைக்கு வருமாறு விடுதலைப்புலிகளுக்கு அழுத்தம் கொடுக்குமாறு, வெளிநாடுகளுக்குக் கோரிக்கை விடுத்துக் கொண்டும், அதேசமயம் விடுதலைப்புலிகள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுகிறார்கள் அவர்களைத் தடைசெய்ய வேண்டுமென்றும் வெளிநாடுகளைக் கேட்டு நச்சரிக்கிறார்கள். பேச்சுவார்த்தைக்கு அவர்களை வரச் சொல்லுங்கள் என்று சொல்லும் அதே சமயம் அவர்கள் பயங்கரவாதிகள் அவர்களை அங்கீகரிக்காமல் தடை செய்யுங்கள் என்று கேட்கிறார்கள். இது என்ன ராஜதந்திரம்? என்று கேட்டேன்.

இதே சமயம் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தோடு தமிழர்களை மேலும் பிளவுபடுத்துவதற்கான முயற்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முஸ்லிம் அரசியல் கட்சிகள் தமக்குள்ள வேற்றுமைகளை மறந்து ஒன்றுபடுவதற்கு முன்வந்துள்ளன. தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் மேலும் பிளவுபடுத்தி தமிழ் பேசும் மக்களுக்குள் மீண்டும் முறுகல்களையும் மோதல்களையும் ஏற்படுத்துவதற்கு எடுத்த முயற்சிகள் முஸ்லிம்காங்கிரஸ் தலைவர் ஹக்கீமின் துரித முயற்சியாலும், விடுதலைப் புலிகளின் பிரதேச பொறுப்பாளிகளின் முயற்சியாலும், வெற்றியளிக்காமல் போயின. என்றாலும் இப்பொழுது யாரும் யாரையும் கொலை செய்துவிட்டு விடுதலைப் புலிகள் மீது பழியைச் சுமத்தி விடுவது சுலபமாக இருக்கிறது. இனியும் எந்தக் கொலைகளும் நடை பெறாமல்த் தடுப்பதற்கு மாணவர்களுடன் சேர்ந்து மக்களும் முன்வர வேண்டும் என்று சொன்னபடி நடந்தார் பரமசிவம்.





# இலங்கையில் மாற்றம் பெறவேண்டிய கல்வித் திட்ட நடைமுறைகள்

**அறிமுகம்**

கல்வி என்பது உலகளாவிய ரீதியில் தற்போது பாரியளவில் மாற்றம் பெற்றதாகி விட்டது. தனியார்துறை ஊடாகவும், வேலைவாய்ப்பைப் பெறக் கூடிய கல்விக்கும் சந்தர்ப்பங்கள் கூடியளவு பெருகிவிட்டது. தகவல் புரட்சிக்கும் மாறி வருகின்ற புதிய புதிய சூழல் தேவைக்கு ஏற்ப கல்வி மாற்றமடைந்து விட்டது. இத்தகைய மாற்றங்களில் இலங்கை பின்னடைவிலேயே காணப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் நாட்டில் இடம் பெற்று வந்த இனப்போருக்கு செலவிடப்பட்ட பொருளாதார செலவே முக்கிய காரணமாக தற்பொழுது உணரப்படுகிறது. இலங்கையில் கற்கின்ற கல்விக்கும், தொழில் முறையை பெற்றுக் கொள்வதற்கும் இடையில் பாரிய இடைவெளி தோன்றியுள்ளது.

இவற்றினை அடிப்படையாக்க கொண்டு கல்வியமைப்பில் புதிய தொழில்முறை சார்பான கற்கை நெறிகளைப் பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்கள் மூலம் அறி முகப்படுத்தப்படவேண்டியுள்ளது. எமது நாட்டைப் பொறுத்த வரையில் தனியார் துறைமூலமான கற்கை வாய்ப்புகளுக்கான சந்தர்ப்பம் குறைவாக உள்ளமையும், தொழில் முறைசார் மற்றும் கல்வி வாய்ப்பு போட்டியான முறையில் வளர்வது குறைவாகவுள்ளது எனவும் குறிப்பிடலாம்.

இந்தக் கட்டுரை, மாறி வரும் கல்வி முறைக்கு ஏற்ப உலகளாவிய ரீதியிலும், இந்தியாவிலும் எவ்வாறான கல்விக்கு முக்கியம் கொடுக்கின்றது என்பதை ஆராய்வதுடன், எமது நாட்டிலும் எதிர் காலத்தில் இது போன்ற கற்கை நெறிக்கான வாய்ப்புகளை, அரசு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் ஆராய்வதாக அமைகின்றது.

உலகளாவிய ரீதியிலும், அபிவிருத்தி அடைந்து வரும் இந்தியா போன்ற நாடுகளிலும் புதிய தகவல் தொழில் நுட்பத்துறைக்கு பொருத்தமானதும், நாட்டின் தேவையையும், அபிவிருத்தியையும் எதிர்கால மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு சூழல் பிரச்சினைகள் மற்றும் மக்களின் வேலை. வாய்ப்பை அதிகரித்துக் கொள்ளவும் சுயமுயற்சி, சுயமேம்பாடு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு புதிய கற்கைகள் கல்வி நிறுவன அமைப்பினூடாக அறிமுகம் செய்யப்படுவதைக் காணமுடிகிறது.

உலக வர்த்தக ஒப்பந்தத்தில் இந்த ஆண்டு இந்தியா கையெழுத்திடவுள்ளது. இதனால் உலகக் கல்வி நிறுவனங்கள் இந்தியாவில் தாரளமாக கால்பதிக்கும். அதேபோல இந்திய கல்வி நிறுவனங்கள் வெளிநாடுகளில் அடி எடுத்து வைப்பதில் தடை இராது. இந்த நிலையில் கல்வியில் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில், கற்கை முறைகள் தற்பொழுது இந்தியாவில் அறிமுகம் செய்யப்படுகின்றன. இவற்றினை எமது நாட்டிலும் அறிமுகம் செய்வது மிகவும் அவசியமாகவுள்ளது.

**புதிய கற்கை நெறிகளின் அறிமுகம்**

கல்வி உலகம் வெகுவாக மாறிவிட்டது. கடந்த ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கல்வி என்று கருதப்பட்டவை, சில நூற்றாண்டுகளுக்கு முன் கல்வியாக இல்லை. உலகம் சிறிய கிராமமாக மாறிவிட்டது. யாரும் எதையும் எப்படியும் கற்கலாம் என்று விரிவாகி விட்டது. மேலும் வீட்டில் இருந்தபடியே கற்கை நெறியை E.Learning மூலம் மேற்கொண்டு அதற்கேற்ப தொழில் வாய்ப்பைப் பெறக் கூடிய வசதி வந்து விட்டது. இன்சுரன்ஸ், பட்டுப்பூச்சி வளர்ப்பு, தையல், கைவினைத்தொழில், காளான் வளர்ப்பு, உணவுப் பொருள் தயாரிப்பு என்பன பெண்கள் கல்வியாக பிரபல்யம் அடைந்துள்ளது.

தொலைநிலைக்கல்வி , அஞ்சல் வழிக்கல்வி On - line education என்ற வகையில் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு கல்வி நிறுவனங்கள் இந்தியாவில் கற்கை நெறிகளை அறிமுகம் செய்துள்ளது. இவையெல்லாம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை மையமாகக் கொண்ட கல்வியாகவே அமைகின்றது. அண்ணா பல்கலைக்கழகம், மின்னணுவியல், மருத்துவ மின்னணுவியல், கேட் காம், சுற்றுச் சூழல் அறிவியல், கலைப்புலம், நிர்வாகவியல் கல்வி போன்ற பாடநெறிகளை புதிதாக அறிமுகம் செய்துள்ளதுடன் அப்பலோ மருத்துவமனையுடன் இணைந்து 'டெலி மெடிசின்' எனப்படும் தொலை தூர மருத்துவ வசதியை கிராமங்களுக்கு வழங்குகின்றது. அத்துடன் 'சமுதாய வானொலி' ஊடாக உள்ளூர் மக்களுக்கு கல்வி மேம்பாட்டு விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்வைத்துள்ளது.

**செயற்கை கோள்வழியிலான கற்கை முறை**

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்துடன் 'பயிற்சி மேம்பாடு தொடர் அலைவரிசையை' உருவாக்கி, அதனூடாக செயற்கைக் கோள் உதவியுடன், அறிஞர்களின் அறிவியல் கண்டுபிடிப்புகள் உள்ளிட்ட பல கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றது. பல்கலைக் கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 'தொடு திரை கணினி'(Touch Screen Computer) மூலம் இந்தப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வெற்றிடங்களை இனங் கண்டு விபரங்களைப் பெறவும், விண்ணப்பிக் கவும் வாய்ப்புக்கள் உண்டு. இவற்றினை எமது நாட்டு பல்கலைக்கழகத்துடன் ஒப்பீடு செய்து பார்க்கின்ற போது, எமது நிலைமை சுயமாகவே உணர முடிகிறது.

**'உலகமயமாகியுள்ள உயர்கல்வி சிந்தனை'**

தற்போது உலகலாவிய ரீதியில் ' உலகமயமாகியுள்ள உயர்கல்வி' என்ற சிந்தனை வலுவடைந்துள்ளது. எல்லா நாடுகளிலும் உயர் கல்வியை பெருமளவில் தரம் உயர்ந்த கல்வியாக உருமாற்றவும், ஒரு நாட்டுக் கல்வி எந்த நாட்டுக்கும் பயன்படுவதாக அமைய பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழகத்தில் திறந்த பல்கலைக்கழகத்தின் மூலம் (Self - Instructions) சுயமாகப் படிக்கும் வகையில் புத்தகங்கள், ஒலி, ஒளிப் பேழைகள் மற்றும் சென்னை வானொலி மூலம் கலந்துரையாடல் நிகழ்ச்சியையும் மேற்கொண்டு வருகிறது. இங்கு 34 கற்கைகள் வேலை வாய்ப்பை பெறும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. 340 தகவல் மற்றும் பயிற்சி மையங்களும், செய்முறை பயிற்சியை மேற்கொள்ள 77 தொழில் நுட்ப மையங்களும் அமைக்கப்பட்டு கல்வியை வழங்கி வருகின்றன.

**பல்லூடக வழியிலான கல்வி**

இந்தியாவிலும், உலகளாவிய ரீதியிலும் இணையவழிக்கல்வி மிகவும் பிரபல்யம் பெற்றுள்ளது. எமது நாட்டிலும் தற்பொழுது அறிமுகம் செய்யப்பட்டு வருகிறது. இணையத் தளத்தின் ஊடாக பல்லூடகங்கள் (Multi media) வசதியைப் பயன்படுத்தி பல வகையில் கற்றல் தளங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இணையவழிக் கல்வியை மின் கல்வி (e - learning), தொடர்நிலைக் கல்வி ( on - line - education) எனவும் குறிப்பிடுவர். தகவல் தொடர்பு தொழிலியத்தின் (Information and Communication Technology ICT) வளர்ச்சி இணைய வளர்ச்சி கல்விக்கு அடித் தளமாக அமைகிறது. இந்த முறையை நாடளாவிய ரீதியில் அறிமுகம் செய்தால் எமது நாட்டிலும் கல்வி அமைப்பிலும், அபிவிருத்தியிலும் மாற்றம் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. இவற்றினை இந்திய அரசுடன் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தி செயற்படுவதன் மூலம் விரிவடையச் செய்யமுடியும்.

**மின் நூலக அறிமுகம்**

கல்வியறிவை வழங்குவதில் நூலகங்களின் செயற்கட்டுமானம் தற்பொழுது உலகளாவிய ரீதியில் மாற்றம் பெற்று ' மின் நூலகம்' என்ற அமைப்பு ஊடாக நூல்களை எளிதாகவும், விரைவாகவும் கற்க வாய்ப்பு உண்டாகியுள்ளது. பொதுவாக நூலகத்தில் ஒரு நூலை ஒருவர் மட்டுமே பார்க்க முடியும் ஆனால், 'மின் நூலகத்தில்' ஒரு நூலை ஒரே நேரத்தில் எத்தனை பேர் வேண்டுமானாலும் கற்கமுடியும். எப்பொழுதானாலும், எங்கிருந்தும் படிக்கலாம். மின் நூலகத்தில் தமிழ் இலக்கியம், இலக்கணம், அகராதி என்பன உள்ளன. ஆய்வாளர்கள் பயன்படுத்தும் வகையில் பல வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தில் மின் நூலகத்தை வசதியாக இலவசமாக பார்க்க முடியும்.

(www. tamilvu - org - website/tamilvu a vsnl. com.e - mail)

**சமுதாயக் கல்வி மைய உருவாக்கம்**

இன்று சமுதாயக் கல்வி மையம் நிறுவப்படுகிறது. இதனூடாக குறிப்பிட்ட தொழில் நிறுவனங்கள் உள்ள பகுதியில் வசிக்கும் இளைஞர்களுக்கு வேலை தேவைப்படுகிறது. தொழில் நிறுவனங்களுக்கு ஊழியர்கள் தேவைப்படுகின்றனர். அந்தப் பகுதியில் திறமையற்ற இளைஞர் உள்ளனர். அந்தத் திறனை அவர்களிடையே ஏற்படுத்துவதே இதன் அடிப்படை நோக்கம். பல்கலைக்கழகங்களில் சட்டத்துறையை மேம்படுத்தும் வகையில் பல்கலைக்கழக வளாகங்களில் மாதிரி நீதிமன்றங்கள் அமைக்கப்படுகிறது. இதனூடாக மாணவர்கள் சட்டப் பயிற்சியைப் பெறுவது இலகுவாக்கப்படுகிறது.

**தன்னம்பிக்கை பள்ளியினூடாக ஆளுமை விருத்தி**

இன்றைய மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்கினாலும்,தங்களது திறமையை வெளிப்படுத்தி அறிவை உரிய வகையில்,பயன்படுத்தும் வகையில் தோல்வியடைகின்றனர். தாங்கள் படித்த, சேகரித்த அறிவை சரியாகவும், பிறர் மனதில் பதியும் வகையிலும் வெளிப்படுத்தும் ஆற்றல் (communication skill), மன ஒருமை ( concentration), தலைமைப் பண்பு ( leader ship), மன அழுத்தத்தை தவிர்த்தல் ( stress management), நேர்முகாமை (Time management), நினைவாற்றலை வளர்ப்பது (memory Techning) ஆகிய முக்கிய தேவைகளாக உணரப்பட்டுப் பல நிறுவனங்கள் இந்தக் கற்கை நெறி தொடர்பாக பயிற்சியை வழங்க தயாராகியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

இவ்வாறான ஆளுமைப் பயிற்சியை மாணவர்களுக்கு அளிக்கும் 'தன்னம்பிக்கை பள்ளி' பல உருவாகியுள்ளன. இவற்றுக்கென மனித ஆற்றல் மேம்பாட்டுத் துறை ஆலோசகர் கல்வி நிறுவனங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். மாணவர்கள் திறமையானவர்களாக இருந்தாலும், தன்னம்பிக்கை அற்றவர்களாக உள்ளதை நகர, கிராம வேறுபாடு இன்றி இன்று அவதானிக்க முடிகிறது. இந்த நிலைமை எமது நாட்டிலும் காணமுடிகிறது. இதனால் விரக்தி, தற்கொலை, கல்வி மீது வெறுப்பு என்பன மாணவர்களிடையே காணக் கூடியதாக உள்ளது. இதனை கருத்திற்க் கொண்டு தற்கொழுது பாடசாலை மட்டத்தில் 'ஆலோசனை வழி காட்டுநர்' நியமிக்கப்பட்டுள்ளமையை எடுத்துக் காட்டாகக் கூறலாம். இந்தக் கல்வி ஆற்றுகைத் திட்டம் மேலும் விரிவாக்க வேண்டிய தேவை போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் இயற்கை அழிவினால் பாதிக்கப்பட்ட எமது பிரதேச மாணவர்களுக்கு இன்றியமையாதது.

**சூழலை மையப்படுத்திய கற்கை**

இன்று கல்லூரி பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள கற்கை சுற்றுச் சூழல் கல்வி. இதற்கான சிறப்புப் பாடத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனூடாக உலகளாவிய ரீதியில் சூழலில் ஏற்பட்டுள்ள ஓசோன் படை மாற்றம், அமிலமழை, காடழிப்பு, கடலரிப்பு, மண்ணரிப்பு, உயிரின் அழிவு போன்றவற்றுக்கு தீர்வு ஏற்பட வாய்ப்புள்ளதுடன், சூழல் பேண்நிலை தொடர்பான விழிப்புணர்வு உண்டாக வாய்ப்புள்ளமை உணரமுடிகிறது. இலங்கையிலும் இந்தக் கல்வித் திட்ட நடைமுறை பாடசாலைகளினூடாக இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சூழல் கல்வி மூலம் சூழலியல் விஞ்ஞானி (environmental scientist), சூழல் பொறியியலாளர் (environmental engineer) , சூழல் திட்டமிடலாளர் (environmental planner), சூழல் பகுப்பாய்வாளர் (environmental Analyst), போன்ற வேலை வாய்ப்பை பெற முடிகிறது. மழைநீர் சேகரிப்பு பற்றிய முதுகலைப் படிப்பை சென்னைப் பல்கலைக்கழகத்தின் நிலவியல் துறையின் நிலம் மற்றும் சூழலியல் கல்வி மையம் நடத்துகின்றது.

கடல்வள அபிவிருத்தி மற்றும் பயன்பாடுகளை பெறும் வகையில் கடல் வாழ் உயிரியல் மற்றும் கடலியல், கடலோர நீர் வேளாணியல் (coastal Aquaculture), கடல் உயிரியியல் தொழில் நுட்பம் ( Marine Biotechnology), கடல் உணவு தொழில் நுட்பம் போன்ற துறைகள் விருத்தி அடைந்து வருகின்றன. எமது நாட்டைப் பொறுத்த வரையில் கடல்வளம் மிகப் பெரிய ஒருவளமாக இருப்பதோடு, இந்தத் துறை சார்பான பாடநெறிகளை விரிவாக்கம் செய்வது மிகவும் அவசியமாகும்.

தகவல் தொடர்பு சாதனங்களில் தற்போது மொபைல் தொலைபேசி மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகிவிட்டது. இதனால் அவற்றைப் பழுது பார்க்கும் தொழிலும் அவசியமானதாகிவிட்டது. இதற்கு ஆங்கில அறிவும் தேவையானது. இந்தியாவில் கிராமப் புறப் பெண்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும் இந்தப் பயிற்சியைப் பெற்று வீட்டில் இருந்தபடியே பொருளாதார வளத்தை பெற வாய்ப்பு உண்டாகியுள்ளது.

**பரவலடையும் தொலைநிலைக் கல்வி**

தொலைநிலைக் கல்வி வாய்ப்பின் ஊடாக சிறைக் கைதிகள், அதிகாரிகள் பல்வேறு கற்கைநெறியை தொடர்வதற்கான வாய்ப்புகள் விரி வடைந்துள்ளன. நாட்டின் விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் வகையிலான பயிற்சி முறைகளும்முக்கியம்பெற்று வருகின்றன. உலகளாவிய ரீதியில் வேலையுலகுக்கு தரமான அளவீட்டு கற்கை நெறிகளாக TOEFL, IELTS, GMAT, GRE போன்ற ஆங்கில மற்றும் தகவல் தொழில்நுட்ப கற்கைகளும் மிகவும் அவசியமானதாக விளங்குகின்றது. வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் வழங்கப்படும் புலமைப் பரிசிலைப் பெற்றும், கட்டணம் செலுத்தி கற்கின்ற நடைமுறையும், பரவலடைந்து வருவதை காணமுடிகிறது. இத்தகைய நடைமுறைக்குள் ஈடுபடுவதற்கு, எமது நாட்டு மக்களின் பொருளாதார நிலை பெரும் சவாலாக அமைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**விழுமியம், பண்பாட்டு கல்வித்திட்டம்**

சமகாலத்தில் பெண்களுக்கான கல்வி வாய்ப்புகளும் மதிப்புறு கல்வி (value education), அறிவியல் மற்றும் பண்பாட்டு கல்வி (Ethics & Culture) கல்வியும் முக்கியம் பெற்று வருகிறது. வேளாண்மை கல்வி பற்றிய சிந்தனையும், வாய்ப்பும் அதிகரித்து வருகிறது. சுற்றுலா பயணிகளுக்கு வாய்க்கு ருசியான உணவு வேண்டும். அதற்கு 'ஹோட்டல் மனேஜ்மன்' கற்கையை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. திறமை, முயற்சி, கடின உழைப்பு அவசியமானது.

**கல்வியில் "நேனோ தொழில்நுட்பம்"**

இப்பொழுது உலகையே கணிப்பொறி ஆட்சி செய்கிறது. அது போல இன்று அறிவியல் அறிஞர்களால் அதிகம் பேசப்படும் தொழில்நுட்பமே 'நேனோ தொழில்நுட்பம்'(Nano Technology) கணினிப் பொறியை விட இனி வரும் காலங்களில் அன்றாட வாழ்வில் பல வியக்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தும் என்று அறிவியல் எதிர்பார்க்கிறது. அணுக்களாலும், மூலக்கூறுகளாலும் ஏற்படும் தொழில் நுட்பம் அணுக்கள் மற்றும் மூலக் கூறுகளின் அமைப்பையே மாற்றுவதாகும். இன்றைய தொழில் நுட்பங்கள் அனைத்துமே மேலிருந்து கீழ் நோக்கி செயற்படுவதாகும். நேனோ தொழில் நுட்பம் கீழிலிருந்து மேல்நோக்கி செயற் படுவது.

ஓர் ஒலிநாடாவில் ஆரம்பத்தில் 10 பாடல் பதிவு செய்யப்பட்டது. இன்று 120 பாடல்கள் எப்படி மென்வட்டில்( Compact disc) பதிவு செய்ய சாத்தியம் ஏற்பட்டதோ, அதே போல எதிர் காலத்தில் நேனோ ஊடாக 1200 பாடல்களை எளிதாகப் பதிவு செய்ய முடியும். மேலும் பிரிட்டானிக்காவின் 24 கலைக் களஞ்சியத் தொகுப்புக்களை ஒரு குண்டூசி முனையில் எழுவதும் சாத்தியப்படும். நூலகத்தில் உள்ள புத்தகங்கள் அனைத்தையும் ஒரு தொகுப்பு சுற்றில் அடக்கிவிட வாய்ப்பளிக்கிறது.

மருத்துவத் துறையில் D.N.A மூலக் கூறுகளை மாற்றவும், நேனோ ரோபோட்கள் ஊடாக செல்களில் மாற்றங்களை ஏற்படுத்தவும் முடியும். ஓசோன்படை ஓட்டையைக் கூட இந்தத் தொழில் நுட்பம் ஊடாக சரி செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த முறை தொடர் பான கல்வி தொழில்நுட்ப அறிவு, மாணவர்களுக்கு மிகவும் பயனுடையதாகக் காணப்படுகிறது.

**எஜீசாட் இணைப்பினூடாக தகவல் கல்வி**

செயற்கைக் கோள் வசதியைக் கொண்டு கல்வி வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 'எஜீசாட்' செயற்கைக் கோள் மூலமும், இன்சாட் செயற்கை கோள் மூலமும் கல்விப் பணிக்கான ஒளிபரப்புகள் வகுப்பறைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. எஜீசாட் செயற்கை கோள் இந்தியாவின் கிராமப்புற அறிவொளியை விரிவு பெற செய்துள்ளது. பல் கலைக் கழகங்கள், கல்லூரிகளை ஒன்றிணைத்து காட்சி வழிக்கல்வி கற்பிக்க வசதியாக உள்ளது. வானொலி, தொலைக்காட்சி, வீடியோக்கான பரன்சிங், ஒன்லைன், இன்ரநெட், தொலைத் தொடர்பு உள்ளிட்ட வசதிகள் மூலம் கல்வி வழங்க எஜிசாட் திறவுகோலாக அமைகிறது.

**ஹோம் நர்ஸ்களுக்கான தனியான கற்கை**

ஒரு காலத்தில் தொண்டாக இருந்த மருத்துவப்பணியும், ஆசிரியப் பணியும் இன்று தொழில்கள் ஆகிவிட்டன. அதைப் போல் சமூக சேவையும் ஒரு தொழிலைப் போல் விரிந்து விட்டது. தொழில் என்று வந்துவிட்டால் அதற்கென முறையான கல்வியும் அவசியம் என்பது தற்பொழுது வலுவாக உணரப்படுகிறது. தாய், தகப்பன் வேலைக்கு செல்வதாலும், குழந்தைகள், முதியவரை கவனித்துக் கொள்வதற்கு 'ஹோம் நர்ஸ்கள்' உதவுகின்றனர். இதற்கென தனியான கற்கை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.


உயிர் தகவலியல் (Bio-in Formatics) துறை நவீன மருந்துகள் தயாரிப்பதிலும், வேளாண்மைத் துறையிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தத் துறை சார்ந்த வேலை வாய்ப்பு இனி வரும் காலங்களில் அதிகரிக்கவுள்ளது. உயிரியல் மற்றும் கணினி ஆகிய இரு துறைகளும் இணைந்து உருவாக்கப்பட்டது. மரபணு மூலக் கூறுகள் தொடர்பான தகவல்களை சேகரித்தல், அவற்றை ஆய்வுக்குட்படுத்தல், முடிவுகளை மனிதருக்கு பயன்படும் வகையில் செயற்படுத்தல் முறைகளை அடிப்படை யாகக் கொண்டது. இந்தத் துறை சமீப காலத் தில் மிக வேகமாக வளர்ச்சி அடைந்து மருத்துவம், வேளாண்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு துறைகளுக்கு பெரும் பயனுடையதாக அமைகிறது.

உலகளாவிய ரீதியில் மரவேலை மற்றும் கதவுகள் பிரேம்கள் செய்வதற்கான பயிற்சிக் கற்கை, விளையாட்டுத்துறை, சுற்றுலாத் துறை சார் கற்கைகள், மூலிகை மருத்துவக் கற்கை, தங்க நகை மதிப்பீட்டாளர், தங்க நகை வடிவமைப்பு பயிற்சி, கம்பியூட்டர் மூலம் நகை வடிவமைப்பு போன்ற துறைகளில் கூடக் கற்கை நெறிகள் உருவாகியுள்ளன. உடல் ஊனமுற்றோருக்கான இயக்க அறிவியல் கற்கை, பிஸியோதெரபி, நியூட்ரிஷன் என்பவற்றை கற்கும் வாய்ப்புகளும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவையெல்லாம் கூடியளவு தொழில் வாய்ப்பைப் பெறும் வகையைச் சார்ந்ததாகவே காணப்படுகிறது.

மேற்கூறப்பட்ட அடிப்படையில் கல்வி என்ற தளம் மாற்றமடைந்து மாறி வருகின்ற புதிய தேவைகளை சமாளிப்பதாகவே, ஒவ்வாக்கப்பட்டு வருகிறது. இந்த நீரோட்டப் பாதையில், எமது பிரதேச கல்வி அடிப்படை அம்சங்களை உள்வாங்கிக் கொண்டு உலகளாவிய ரீதியில் வளர்ச்சி பெறுவதும், மாற்றங்களைக் கொண்டு வருவதும் காலத்தின் தேவையாகும்.

பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்
ஆசிரியர் தீவகக் கல்வி வலயம்.

# நாட்டுப்பற்றாளர் சிவகடாட்சத்தின் இறுதி நிகழ்விலிருந்து...







# பண்ணைப் பாலம் ஊடான போக்குவரத்து நாளை முதல் 2 வாரங்களுக்கு நிறுத்தம்!

## மாற்று ஒழுங்குகள் குறித்து அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம் —

யாழ். பண்ணைப் பாலப் புனரமைப்புப் பணிகள் இடம்பெறவுள்ளதால் – நாளைமுதல் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை – இரண்டுவார காலத்துக்கு இந்தப் பாலத்தூடான போக்குவரத்துகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளன.

இதனால் தீவகத்துக்கான போக்குவரத்துத் தொடர்பாக செய்யப்பட்டுள்ள மாற்று ஒழுங்குகள் குறித்து யாழ். அரச அதிபர் அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளார் .

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது –

யாழ். பண்ணைப் பாலம் புனரமைக்கப்படவுள்ளதால் 2005.10.15 ஆம் திகதியிலிருந்து 30 ஆம் திகதிவரை இரண்டு வாரங்களுக்கு போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்படவேண்டிய தேவையிருக்கிறது. இதனால் அதற்கான மாற்று ஏற்பாடுகள் செய்வது தொடர்பாக ஆராயப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

பண்ணைப் பாலத்தினூடான போக்குவரத்திற்குப் படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்படும். பொதிகளை ஏற்றுவதற்கு விசேட படகுகள் ஒழுங்கு செய்யப்படும் என்பதுடன், கர்ப்பிணிகள், நோயாளர்களின் அவசர தேவைகளுக்கென இரவு நேரங்களில் பயன்படுத்துவதற்காக ஒரு படகு பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்படும்.

இந்தப் படகுச் சேவையின் போது பிரயாணிகள் இலவசமாகச் செல்லக்கூடிய விதத்தில் இதற்கான கட்டணச் செலவு, ஒப்பந்தகாரரால் பொறுப்பேற்கப்படும். மேலதிக பொருட்கள் பொதிகளுடன் வருபவர்கள் அதற்கான கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

பண்ணைப் பாலத்திற்கப்பால் ஊர்காவற்துறைப் பகுதிக்கான சேவைக்கென 4 இ.போ.ச பேரூந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படும். இதற்கான எரிபொருள் வேலணையில் களஞ்சியப்படுத்தப்படும்.

இ.போ.ச. பேரூந்துகள் சேவையின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் ஏற்கனவே அதற்கென ஒதுக்கப்பட்ட நேர அட்டவணையின்படி சேவையில் ஈடுபடுத்தப்படும். அத்துடன், தனியார் மினிபஸ்களும் வழமையான நேர அட்டவணையின்படி சேவையில் ஈடுபடும். தேவை ஏற்படும் பட்சத்தில் மாற்றம் செய்யப்படும். இதன்படி பண்ணைப் பாலத்தின் இரு பக்கங்களிலிருந்தும் 6 மணிக்கு சேவை ஆரம்பிக்கப்படும்.

பாலத்திற்கு அப்பால் தீவுப் பகுதியில் சேவையில் ஈடுபடும் இறுதி இ.போ.ச பேரூந்து மாலை 7 மணிக்கு பண்ணைப் பாலப் பகுதிக்கு வந்தடையவேண்டும்.

குறிகட்டுவான் வரை செல்லும் இறுதி இ.போ.ச. பேரூந்து பெருங்காட்டுப் பகுதியில் தரித்துவிடப்படும்.

தற்போது தீவுப் பகுதியில் சேவையில் ஈடுபட்டு வரும் 20 தனியார் மினிபஸ்களும் பாலத்தின் இரு பகுதிகளுக்கும் பிரித்து விடப்பட்டு சேவையில் ஈடுபடும்.

எழுவைதீவு, அனலைதீவு மக்களின் நலன் கருதி அந்த மக்களை கல்லுண்டாய் வழியாக செல்வதற்கு, கடற்படையின் அனுமதியுடன் ஒழுங்கு செய்யப்படும்.

பாலம் புனரமைப்பதற்குத் தேவையான பொருட்களை அந்த இடத்திற்குச் சிரமம் இன்றிக் கொண்டு செல்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இவ்வாறு படகுச் சேவை மூலம் மேற்கொள்ளப்படும் பிரயாண ஒழுங்குகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் மேற்பார்வை செய்வதற்கு ஒழுங்கு செய்யப்படும் என்றும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் சிவகடாட்சம் படுகொலைக்கு யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை கண்டனம்!

யாழ்ப்பாணம்

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபரும், யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை நிர்வாக உறுப்பினரும், கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளருமான நாட்டுப்பற்றாளர் நடராசா சிவகடாட்சம் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டதை யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபராக பணிபுரிந்து கொண்டும் சமூகத்தின் நலனுக்காகவும், தேச விடுதலைக்காகவும் நடராசா சிவகடாட்சம் அயராது உழைத்தவர்.

யாழ். மாவட்டத்தில் நடைபெறும் கலாசார, சமூக சீரழிவுகளை தனது கருத்து மூலம் மக்களுக்கு தெளிவுபடுத்தி, விழிப்புணர்வு ஊட்டியதுடன், தேசிய எழுச்சிப் பேரவை மூலமாக, பின் தங்கிய கிராமங்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், சமூக மேம்பாட்டுக்காகவும் அயராது உழைத்தவர்.

கோப்பாய் பிரதேசத்தில் நடைபெறும் பொது நிகழ்வுகளை முன்னின்று நடத்தியதுடன், இரவு பகலாக சமுதாய நலனுக்காக தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டவர்.

இவரது பிரிவால் துயருறும் துணைவியார், பிள்ளைகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போர் நிறுத்த அமுலாக்கம் தொடர்பாக...

நோர்வே தூதுக் குழுவினருடன் இடம்பெற்ற இந்தச் சந்திப்புத் தொடர்பாக – அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து வெளியிடுகையில் –

போர் நிறுத்த சூழல் நெருக்கடி நிலைமைகளை அடைந்துகொண்டிருக்கிறது. நெருக்கடிச் சூழலை மாற்றியமைத்து ஒரு உறுதிப்பாடான நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்பது தான் நோர்வே தரப்பின் நிலைப்பாடாக இருக்கிறது.

போர் நிறுத்த சூழலைப் பலப்படுத்தும் நோக்கோடுதான் நோர்வே சிறப்புத் தூதுவரின் பயணம் அமைந்தது.

நோர்வே தரப்பின் நிலைப்பாடாக இரண்டு தரப்பும் நேரடியாகப் பேசி முடிவுக்கு வருவது தான் நல்லதெனவும், அப்படியானதொரு சூழல் உருவாக்கப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் அரச தரப்பிலிருந்து எந்த வித ஆலோசனைகளும் எமக்கு அனுப்பிவைக்கப்படவில்லை. நோர்வேயின் வேண்டுகோள்களையும், ஆலோசனைகளையுமே முன்வைத்தனர். இரண்டு தரப்பும் பேச்சு மேடைக்கு வர வேண்டுமென்றும், இரு தரப்பும் நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடி போர் நிறுத்த அமுலாக்கம் பற்றிய நடைமுறைகளைப் பலப்படுத்த வேண்டுமென்பதே நோர்வேயின் ஆலோசனையாக இருந்தது.

நோர்வே தரப்புக்கு எமது தலைமைப் பீடத்தின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

அதாவது, நோர்வே வெளியுறவு அமைச்சருடைய வேண்டுகோளின் அடிப்படையில் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு நாங்கள் தயாரென எமது தேசியத் தலைவர் அறிவித்திருந்தார். நோர்வேத் தரப்பினுடைய முயற்சிக்கும் அனுசரணைக்கும் நாங்கள் மதிப்பளித்து, எமது தேசியத் தலைவரால் உடனடியாகவே எமது முடிவு அறிவிக்கப்பட்டது.

நாங்கள் எந்த இடத்திலும் எந்த மேடையிலும் பேச்சுக்குத் தயாரென அறிவித்திருந்தோம். எமது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. தளம்பலும் இல்லை. உறுதியாகவுள்ளோம்.

இந்த நிலைப்பாட்டை, இந்தச் சந்திப்பில் எமது தேசியத் தலைவர் வலியுறுத்தும்படி கூறியிருந்தார். நோர்வேத் தரப்புக்கு நாம் மீண்டும் வலியுறுத்தியுள்ளோம். போர் நிறுத்த அமுலாக்கம் பற்றிய பேச்சுக்களில் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் நாம் பங்குகொள்ளத் தயாராகவுள்ளோம். ஒரு நடுநிலையான இடத்தைத் தெரிவுசெய்து பேச்சுக்கள் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம்.

தற்போதைய கள நிலைமைகளை நாம் எடுத்து விளக்கியுள்ளோம். தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் கொலைகள், வன்முறைகள் தொடர்பாகவும் எடுத்து விளக்கியுள்ளோம்.

போராளிகளின் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக போராளிகளை எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் அழைத்துக்கொண்ட சூழலில் ஆயுதக் குழுக்களின் வெறியாட்டம் அதிகரித்துள்ளன. மிக மோசமாகக் கொலைகளும், வன்முறைகளும் அதிகரித்துள்ளன.

இந்த நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து யுத்தநிறுத்த சூழலைப் பயன்படுத்திக் கொள்வதன் அவசியத்தன்மையை நாம் தெளிவாக விளக்கியுள்ளோம்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பேச்சுக்கள் நடைபெறுமா என்பது பற்றிய எந்தவிதமான ஊகங்களையும் வெளியிடமுடியாது. ஏனெனில், எந்த விடயங்களிலும் இரு தரப்பு என்பதில் நாம் ஒரு தரப்பு. நாம் நினைப்பதெல்லாம் நடந்து விடுவதில்லை. அரச தரப்பினுடைய இணக்கப்பாடும் ஒத்துழைப்பும் தேவை. அரச தரப்பிடமிருந்து சாதகமான பதில்கள் கிடைக்காதவிடத்து நாம் எதுவும் கூறமுடியாது.

நோர்வே தரப்பு – இரு தரப்பையும் பேச்சுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதிலும், சமாதான முயற்சிகள் பலப்படுத்தவேண்டுமென்பதிலும் மிகவும் ஆர்வமாகவும் உறுதியாகவும் உழைக்கின்றார்கள்.

இந்தச் சந்திப்பில் ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் பற்றியே நாம் விரிவாக நோர்வே தரப்புக்கு விளக்கினோம். போர் நிறுத்த உடன்படிக்கையில் அடிப்படை விதிமுறைகளில் அதுவும் ஒன்று. 1.8 சரத்தில் இது தொடர்பாக மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

போர் நிறுத்த உடன்பாட்டு அமுலாக்கத்தில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஆயுதக் குழுக்கள் கலைக்கப்பட்டு, ஆயுதம் களையப்பட்டு, எமது தாயகப் பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்படவேண்டும் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால், அண்மைக் காலத்தில் ஆயுதக் குழுக்கள் ஆயுத மயப்படுத்தப்பட்டு எமது தாயகப் பிரதேசத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளார்கள்.

பொதுமக்கள், போராளிகள், ஆதரவாளர்கள் என அனைவர் மீதும் ஆயுதக் குழுக்கள் தாக்குதலைத் தொடுப்பதில் தீவிரமாக இறங்கியுள்ளார்கள்.

இலங்கை அரசு தம்மிடம் ஆயுதக் குழுக்கள் எதுவும் இல்லையென மறுத்த நிலையிலும், கண்காணிப்புக்குழு கூட இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் ஆயுதக் குழுக்களின் நடமாட்டம் உள்ளதை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த நிலையில் அரச படைகளின் தளபதி தம்மிடம் ஆயுதக் குழுக்கள் இல்லையெனவும், ஆயுதக் குழுக்களைக் கலைத்துவிட்டோம் எனவும், அறிக்கைவிட்ட மறுநாளே மட்டக்களப்பில் எமது போராளிகள் மீது ஆயுதக் குழுக்கள் தாக்குதலை மேற்கொண்டுள்ளன.

தாக்குதலை மேற்கொண்டபின்னர் இராணுவ காவலரண்களின் பகுதிக்குள்ளேயே உள்நுழைந்துள்ளார்கள். அந்தச் சம்பவத்தை ஆதாரமாக எடுத்துக் கூறியுள்ளோம்.

அண்மையில் நடந்த கொலைகளைப் பற்றியும் சுட்டிக்காட்டியுள்ளோம். ஆகவே, யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளை இரு தரப்புக்களும் நடைமுறைப்படுத்தாவிட்டால் போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து பேணக்கூடிய சூழல் இருக்காது என்று கூறினோம்.

போர் நிறுத்த உடன்பாட்டின் ஒரு தரப்பு என்ற வகையில் மிக அர்ப்பணிப்போடு இருக்கின்றோம். அரச படைகளும் அரசும் போர் நிறுத்த உடன்பாட்டைப் பேணும் விடயத்தில் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்பதை இந்தச் சந்திப்பில் வலியுறுத்தியிருந்தோம்.

அண்மைக் காலமாக சர்வதேச சமூகத்தின் மத்தியில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பாகவும், விடுதலைப் புலிகள் தொடர்பாகவும் (12 ஆம் பக்கம் பார்க்க)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# தமிழகத்திலிருந்து திரும்பிய இரு இளைஞர்கள் கைது!

மன்னார் —

தலைமன்னாரில் இரு தமிழ் இளைஞர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். தமிழ்நாட்டிலிருந்து படகு மூலமாக தலைமன்னார் கடற்பகுதியை வந்தடைந்த போதே பளையைச் சேர்ந்த யோகராஜா பிரின்ஸ் ருச்சினிக் (வயது 22) மற்றும் சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த சிவபாதம் சங்கர் (வயது 26) ஆகியோரே கைதுசெய்யப்பட்டனர்.

தலைமன்னாரில் தென்னந்தோப்பு ஒன்றில் இருந்தபோது கடற்படையால் கைதுசெய்யப்பட்ட இவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இரு இளைஞர்களும் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். மேலதிக விசாரணைக்காக இரு இளைஞர்களையும் தடுப்புக்காவலில் வைக்க பொலிஸார் விடுத்த வேண்டுகோளை ஏற்று எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லா உத்தரவிட்டார்.

கைதுசெய்யப்பட்ட யோகராஜா பிரின்ஸ் ருச்சினிக் கடந்த 2004 ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக்குச் சென்றவர். சிவபாதம் சங்கர் 2001 ஆம் ஆண்டு சென்றவர். இருவரும் தமிழ்நாட்டில் அகதிகளாக தங்கியிருந்ததாகத் தெரியவந்துள்ளது.

## ஜனாதிபதி சந்திரிகா லண்டன் பயணம்!

கொழும்பு —

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று லண்டன் பயணமானார்.

இவர் இந்த மாத கடைசி வாரத்திலேயே நாடு திரும்புவார் என்று ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவித்தன.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களில் கலந்து கொள்வதைத் தவிர்ப்பதற்காகவே, ஜனாதிபதி சந்திரிகா கடந்த ஒரு மாதத்தில் பெரும்பாலான காலப்பகுதியை அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலேயே கழித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## 26 சிறுவர்கள் ஒப்படைப்பு

கிளிநொச்சி —

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சுயவிருப்பத்தில் இணைய முன்வந்த 26 சிறுவர்கள் தங்களது பெற்றோரிடம் சர்வதேச மனித உரிமைச் செயற்பாட்டாளர் இயன் மார்ட்டின் முன்னிலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டனர்.

கிளிநொச்சியில் உள்ள வடக்கு-கிழக்கு மனித உரிமை செயலகத்தின் ஊடாக இயன் மார்ட்டின் முன்னிலையில் நேற்றுப் பிற்பகல் 12.20 மணிக்கு அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

## தமிழீழ நீதி நிர்வாகம்; இயன் மார்ட்டின் பாராட்டு

கிளிநொச்சி —

சர்வதேச மனித உரிமைகள் ஆலோசகர் இயன் மார்ட்டின் நேற்றுக் காலை 12.30 மணியளவில் தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, தலைமை நீதியாளர் அன்பு ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன் பின்னர் நீதியாளர்கள், சட்டக்கல்லூரி மாணவர்களை சந் தித்து சர்வதேச மனித உரிமைகள் தொடர்பாகவும், நீதி நிர்வாகத்துறை கடைப்பிடிக்கப்படவேண்டிய விடயங்கள், மனித உரிமைகள் தொடர்பாகவும் கருத்துகளை வழங்கியதுடன், இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டவர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

அத்துடன், மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஒழுங்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்த அவர், நீதி நிர்வாகத்துறை மனித உரிமைகள் விடயத்தில் அக்கறையுடன் செயற்படுவதாகவும் பாராட்டினார்.

## குடாநாட்டில் கடும் மழை!

கொழும்பு —

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கத்தால் யாழ்.குடாநாட்டில் நேற்றும் பரவலாக கடும் மழை பெய்தது.

இரவு பகலாக நீடித்த கடும் மழையால் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

நேற்றுக் காலை 9 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் யாழ்ப்பாணத்தில் 27.6 மி.மீ. மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இன்றும் மழை பெய்வதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை, நீண்ட நாட்களுக்குப் பின்னர் பருவமழை பெய்யத் தொடங்கியதை அடுத்து விவசாயிகள் நெல் விதைப்பு நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

## நாட்டுப்பற்றாளர்...

அங்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி உப அதிபர் திருமதி கயிலைமகான் தலைமையில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரை முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தன், வலயக்கல்விப் பணிப்பாளர்களான செல்வரட்ணம், விக்கினேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மா.க.ஈழவேந்தன், சிவனேசன், கஜேந்திரன் ஆகியோரும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆசிரியர், இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்க சிரேஷ்ட செயலாளர் பஞ்சலிங்கம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து அஞ்சலி உரைகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவனேசன், மா.க.ஈழவேந்தன், கஜேந்திரன், வலயக் கல்விப் பணிப்பாளர் த.செல்வரட்ணம், விக்கினேஸ்வரன் உட்படப் பலர் நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பொதுமக்களும், மாணவர்களும் மலர் தூவி அஞ்சலி செலுத்தியதுடன் நாட்டுப்பற்றாளர் நடராஜா சிவகடாட்சத்தின் புகழுடல் ஊர்வலமாக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு தகனம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் பொதுமக்கள், மாணவர்கள், மற்றும் கல்விச் சமூகத்தினர் என ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

### நெல்லியடி...

நெல்லியடியிலிருந்து பருத்தித்துறை நோக்கிச் செல்லும் வீதியில் சுமார் 100 மீற்றர் தூரம் வீதிக்குக் குறுக்கே கொங்கிறீற் கற்கள்ளக் குறுக்கே போட்டு பொலிஸாரை நோக்கிக் கற்களையும் வீசி ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்தனர்.

இதனால் பொலிஸார் இராணுவத்தினரை அழைத்ததுடன் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசும் ஆயுதங்களையும் எடுத்து வந்தனர். அதன் பின்னர் மாணவர்கள் அவ்விடத்தையும் விட்டு நகர்ந்தனர்.

இதனால் சுமார் இரண்டு மணி நேரம் நெல்லியடிப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. (12)

### பொலிஸ்...

பாதுகாப்புக் காரணங்களுக்காக சந்தேக நபரான கோபியை நீதிமன்றத்துக்கு அழைத்துவரவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேகநபர் தடுத்து வைக்கப்பட்டுள்ள வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்ற நீதிவான் அங்கு விசாரணைகளை நடத்தினார்.

இந்தக் கொலைவழக்கில் கோபியை அடையாளம் காண்பதற்காக இரு முறை அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டபோதும், அடையாளம் காணப்படாத காரணத்தால் வழக்கைத் தொடர்ந்து விசாரிப்பதா என்பதைச் சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்குத் தெரிவிக்க வேண்டும் என்று நீதிபதி குசல சறோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டார்.

இது தொடர்பான அனைத்து விசாரணை அறிக்கைகளையும் சட்டமா அதிபருக்கு வழங்க வேண்டுமென்றும் இரகசியப் பிரிவு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

## மாணவர்களின்...

ஈடுபட்டனர். யாழ் நகரின் பிரதான வீதிகளான கோப்பாய் வீதி, பருத்தித்துறை வீதி, வைத்தியசாலை வீதி, காங்கேசன்துறை வீதி போன்ற வீதிகளில் வீதித் தடைகள் போடப்பட்டும், டயர்களைக் கொழுத்தியும் மாணவர்கள் போக்குவரத்தை தடைசெய்ததன் காரணமாக போக்குவரத்து தடைப்பட்டது. எவ்வாறாயினும் அனைத்து வீதிகளிலும் மாலை போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது குறிப்பிடத்தக்கது.

இன்றும் தமது வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டம் - இயல்புநிலையை பாதிக்காத வகையில் தொடர்ந்தும் இடம்பெறும் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதியாக...

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனும் கலந்துரையாடி, பொது இணக்கப்பாடு ஏற்படுத்தப்படும்.

சமாதான முயற்சிகளில் ஜனாதிபதி சந்திரிகா முக்கியமானவர். அவரை இது விடயத்தில் இணைத்துச் செயற்படவே விரும்புகின்றோம். கடந்த 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் முடங்கியிருக்கலாம். ஆனால், கடந்த இரண்டு வருடங்களில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

ராணுவத்தில் 34 பிரிகேட்கள் உள்ளன. இவற்றில் ஆறு பிரிகேட்களைத் தெரிவுசெய்து, அவற்றை ஆறுமாதகாலத்தில் மிகவும் பலம் மிக்கதாக்கி, எந்த வேளையிலும், எந்தச் சூழலையும் எதிர்கொள்ளும் வகையில் உருவாக்கப்படும்.

ஜனாதிபதி தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச கண்காணிப்பாளர்களை வரவழைப்பது மிகவும் முக்கியமானதாகும். இவர்கள் தேர்தல் நீதியானதாகவும், நேர்மையானதாகவும் நடப்பதனைக் கண்காணிப்பார்கள்.

அத்துடன், எனது ஆட்சிக் காலத்தில் பிரதம அலுவலகத்திற்காக கணினி கொள்வனவு செய்யப்பட்டதில் முறைகேடுகள் நடந்தள்ளதென்பதனை நான் மறுக்கிறேன்.

ரூ. 340 மில்லியன் தொடர்பிலான கணினி கொள்வனவு தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விசாரணை நடத்தியிருந்தார். அதனையடுத்து பிரதமர் அலுவலகச் செயலாளராக இருந்த பிரட்மன் வீரக்கோனை அனுப்பி, மஹிந்த மற்றும் அதிகாரிகளிடம் உரிய விளக்கம் அளித்துவர கூறியிருந்தேன்.

அம்பாந்தோட்டை நிதி மோசடிக்குப் பின்பு இது போன்ற குற்றச்சாட்டுக்களைக் கூறி அரசியல் லாபங்களைச் செய்ய முனைகிறார் மஹிந்த ராஜபக்ஷ. என் மீதான விசாரணைகளை நான் நிறுத்தவேண்டுமென்று சொல்லப்போவதில்லை. ஊழல் தடுப்பு ஆணையத்தின் முழு விசாரணைக்கும் தயாராக இருக்கிறேன் எனத் தெரிவித்தார்.

## போர் நிறுத்த அமுலாக்கம்...

எதிரான பிரசாரங்களை இலங்கை அரசு முன்னெடுத்து வருகிறது. மிகத் தவறான கருத்துக்களைப் பரப்புவதில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இதை இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டினோம். எமது தலைமைப் பீடத்தின் உறுதியான, தெளிவான நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்துக்குத் தெரியப்படுத்துமாறு வலியுறுத்தினோம். தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தைப் பேணுவதில் அர்ப்பணிப்போடும், உறுதியாகவும் இருக்கிறார்கள் என்பதை சர்வதேச சமூகத்திடம் தெரிவிக்குமாறு கூறினோம்.

இலங்கை அரசுதான் போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் தட்டிக்கழித்துக் கொண்டு, உதாசீனப்படுத்திக்கொண்டு உலக அளவில் எங்களுக்கு எதிரான பிரசாரத்தைக் கட்டவிழ்த்துக்கொண்டு இருக்கிறது. இதுவே இன்றைய நிலைமை எனத் தெரியப்படுத்தினோம்.

ஐரோப்பிய நாடுகள் எமது அதிகாரபூர்வமான பயணங்களை வரவேற்பதில்லை என்று தெரிவித்துள்ளன. எங்கள் தரப்பின் உண்மை நிலைகளை விளக்குவதற்கான கதவுகள் திறக்கப்படவேண்டும்.

இரண்டு தரப்பினதும் உண்மை நிலைகளை அவர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டு, நியாயமான நடுநிலையான நிலைப்பாடுகளை ஐரோப்பிய ஒன்றியம் எடுக்க வேண்டும் என்று நோர்வேத் தரப்பிடம் கேட்டுக்கொண்டோம். இதை நோர்வேத் தரப்பு, ஐரோப்பிய ஒன்றியத்திடம் விளக்க முயற்சிக்க வேண்டும். எமது மக்களுடைய உணர்வுகளை, அபிலாஷைகளை உணர்ந்து கொண்டு ஐரோப்பிய ஒன்றியம் உரிய முடிவுகளை எடுக்கவேண்டும் என்ற எங்கள் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினோம்.

ஜனாதிபதித் தேர்தல் பற்றி எதுவும் நாங்கள் பேசவில்லை. இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் பூரண கட்டுப்பாட்டின் கீழ்தான் அரசு மற்றும் அரச படைகள் இருக்கின்றன.

அதனால் அவர்கள்தான் இன்றைய நிலைமைகளைச் சீர்படுத்த வேண்டும்.

இந்தத் தேர்தல் தொடர்பாக எங்கள் மக்கள் என்ன கருதுகிறார்கள். எதை விரும்புகிறார்கள் என்பதை தேர்தல் நடவடிக்கையில் உள்ளவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இதில் நாங்கள் எதுவும் சொல்வதற்கில்லை. தமிழீழ நிர்வாகப் பிரதேசத்திற்குள் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக எமது சோதனைச்சாவடிகளைக் கடந்துதான் வரவேண்டும் என்பது உண்மை.

போர் நிறுத்த ஒப்பந்தப்படி இரு கட்டுப் பாட்டுப் பிரதேசங்கள் மற்றும் எல்லைக்கோடுகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

இன்னொரு தேசத்திலிருந்து வருபவர்கள் மற்றொருவரது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைவதற்கான சில கட்டுப்பாடுகள் உள்ளன. அது போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

அதற்கமைய கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் நிர்வாகத் தலைமையிடம் அனுமதிபெற வேண்டும். தொடர்பு கொள்ளவேண்டும். அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டும் என அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார்.

நேற்றுக்காலை பத்து மணியளவில் விமானப்படைக்கு சொந்தமான ஹெலிகொப்ரர் மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த நோர்வேயின் சிறப்புத் தூதுவர் மேஜர் ஜெனரல் ட்ரொன் புறூவ் ஹொவ்டே- அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் சந்தித்து பேச்சு நடத்தினார்.

2 மணி நேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## பாதுகாப்பற்ற...

ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த இயன் மார்ட்டின் -

மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் 2003 ஆம் ஆண்டு ஆலோசனைகளை அளித்திருந்தேன்.

தற்போது மக்கள் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் உள்ளதாக உணர்கின்றனர். போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு மனித உரிமை செயற்பாடுகள் முக்கியமானது. மனித உரிமை செயற்பாடுகள் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மேலும் முன்னேற்றும். இங்கு நான் ஒரு கண்காணிப்பாளராக வரவில்லை. ஒரு ஆலோசகராகவே வந்துள்ளேன். எனது ஆலோசனைகள் அந்தரங்கமானவை.

முக்கியமான விடயங்களாகிய குழந்தைகள் பாதுகாப்பு, இடம்பெயர்ந்தோர் திரும்புதல் போன்ற விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டன.

இலங்கை சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவுடன் ஆலோசனை நடத்தவுள்ளேன். ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்திக்கும் திட்டம் ஏதும் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தீபாவளியை முன்னிட்டு
விசேட விலைக்கழிவில்
பெருந்தொகையான சிங்கப்பூர், மலேசியா,
இந்தி டிசையின் புதிய வாழ்த்து மடல்கள்
சீவம் இண்டஸ்றீசின்
நேரடி யாழ்ப்பாண விற்பனையாளர்
மக்மிலன் புத்தகசாலை
3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
T.P 2422
ஸ்ரீகாந் புத்தகசாலை
165 ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
(4726)

தேசிய மொழி ஆய்வு மையத்தின்
இலவச ஆங்கிலம்
இலவச தொலைக்கல்விப்பாடநெறி
சுயவிபரத்தினை அனுப்பி பதிவுசெய்யலாம்
NLRC, Sampath Bank 1st Flr
198.Galle Road,Dehiwala
(2087)

## மரண அறிவித்தல்

### தங்கம்மா பொன்னுத்துரை

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கம்மா பொன்னுத்துரை அவர்கள் நேற்று (13.10.05) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும், சரஸ்வதி, சிவலிங்கம், அமரர் அழகம்மா, கனகம்மா, தவமணியின் அன்பு சகோதரியும், குலசிங்கம், அமரர் பூபாலசிங்கம், நேசராசா, விமலசோதி, சகிலாதேவி, சிறிதரன், லோகேஸ்வரன், சந்திரவதனா ஆகியோரின் பாசமிகு தாயாரும், பத்மாதேவி, ஜெயபதி, ராஜனிதேவி, லோகேந்திரம், ராஜினி, சுதனி, ராஜ்சேகரன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.10.05) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மில் லேன்,
மல்லாகம்.
(இ)
தகவல்
பிள்ளைகள்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.10.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.